# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 சித்திரை 28 வெள்ளிக்கிழமை (11-05-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:166


### ஜெயலலிதா முன்னணி?

சென்னை,மே11

தமிழக சட்டசபைத் தேர்தலுக்காக நேற்று நடைபெற்ற வாக்குப் பதிவுக்குப் பின்னர் தனியார் நிறுவனம் நடத்திய கருத்துக்கணிப்பு அ.தி.மு.க. கூட்டணிக்கு 125 இடங்களும் தி.மு.க. கூட்டணிக்கு 105 இடங்களும் கிடைக்கும் என்று தெரிவித்தது.

ஆனால் - அரசுத் தொலைக் காட்சியான 'தூரதர்ஷன்' எந்தக் கட்சிக்கும் தனியான அறுதிப் பெரும்பான்மை கிடைக்காத நிலை ஏற்படக் கூடும் என்று நேற்று தெரிவித்தது.

## அரசு - புலிகள் இணக்கப்பாட்டுக்கு சாத்தியக்கூறு என்கிறார் கதிர்காமர்

கொழும்பு,மே11

அரசு - புலிகள் நேரடிப் பேச்சு நடத்துவதற்கான திகதி குறித்தொதுக்கப்படவில்லையாயினும், கூடிய விரைவில் இரு தரப்பினரும் பொது இணக்கப்பாட்டை அறிவிக்கும் சாத்தியக் கூறுகள் இருப்பதாக அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அறிவித்துள்ளார்.

பேச்சுக்கான புரிந்துணர்வு ஒரளுவுக்கேனும் ஏற்பட்டிருப்பதாகவும் கதிர்காமர் நம்பிக்கை தெரிவித்தார்.

எத்தகைய தடைகள் தோன்றினாலும் பேச்சு நடத்துவதற்கான சூழல் உருவாகிவிட்டது.

புலிகளின் யுத்த நிறுத்த வாபஸோ, பளைப் பகுதியில் நடைபெறும் சண்டைகளோ சமாதான முயற்சிகளைப் பாதிக்கப் போவதில்லை - என்றார் அவர். (உ-ஒ-10)

### அக்கினிச்சுவாலை இழப்புக் குறித்து அறிவிப்பு

தென்மராட்சியில் மேற்கொள்ளப்பட்ட 'அக்கினிச் சுவாலை 1' இராணுவ நடவடிக்கையின் போது படையினருக்கு ஏற்பட்ட இழப்புகள் குறித்த விவரங்களைப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த நாடாளுமன்றத்தில் நேற்று வெளியிட்டார்.

இந்த நடவடிக்கையில் ஐந்து அதிகாரிகளும் 162 படையினரும் உயிரிழந்தனர்; 88 படையினரைக் காணவில்லை; ஆயிரத்து 900 படையினர் காயமடைந்தனர் என்று அவர் தெரிவித்தார். (உ-3)

# பேச்சுக்கான உடன்பாடு ஏதும் இன்னும் எட்டப்படவேயில்லை!



## கதிர்காமரின் அறிவிப்புக்கு அன்ரன் பாலசிங்கம் பதிலடி



லண்டன்,மே11

**"ஸ்ரீலங்கா அரசாங்கமும் விடுதலைப் புலிகள் அமைப்பும் நேரடிப் பேச்சு நடத்துவதற்கான இணக்கப்பாடு ஏதும் இதுவரை எட்டப்படவேயில்லை.**

**"இரு தரப்பினரும் கூடிய விரைவில் பொது இணக்கப்பாட்டை அறிவிக்கும் சாத்தியக் கூறுகள் இருப்பதாகவும், பேச்சு நடத்துவதற்கான சூழ்நிலை தற்போது உருவாகியுள்ளதாகவும் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறியிருப்பாரேயானால் அது முற்றிலும் தவறானது"**

**- இவ்வாறு கூறியிருக்கிறார் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்.**

**நேற்று நள்ளிரவு உதயனுக்கு வழங்கிய விசேட பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.**

தமது லண்டன் இல்லத்தில் இருந்தவாறு பாலசிங்கம் உதயனுக்கு விசேட பேட்டியை அளித்தார். அதில் அவர் தெரிவித்ததாவது:-

**போர் நிறுத்தத்துக்கு சந்திரிகா இணக்கம்**

யாழ்.சமரில் தங்களுக்கு அண்மையில் ஏற்பட்ட பேரிழப்புகள் காரணமாக -

புலிகளின் பெரிய தாக்குதல்களை சமாளிக்க முடியாத - வலு இல்லாத - நிலையில் -

புலிகளுடன் நேரடியாகப் பேசி சமாதானத் தீர்வை எட்ட வேண்டும் என்ற சர்வதேச நெருக்குதல் காரணமாக -

போர் நிறுத்தத்துக்கு இணங்க வேண்டிய கட்டாயத்துக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது.

போர் நிறுத்தத்துக்கான தனது இணக்கத்தை சந்திரிகா அம்மையார் சொல்ஹெய்ம் மூலம் எமக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

பல்கலைக்கழக வெட்டுப் புள்ளி 14ஆம் பக்கத்தில்

### புலிகள் தாக்குதல்

கொழும்பு,மே11

எழுதுமட்டுவாழின் தென்கிழக்குப் பகுதியில் இராணுவத்தினரின் முன்னரங்க நிலைகள் மீது விடுதலைப் புலிகள் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்திய மோட்டார் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் சிறு காயத்துக்குள்ளாகியதாகவும் -

அதே தினத்தில் நாகர்கோவில் பகுதி இராணுவ முன்னரங்க நிலைகள் மீது விடுதலைப் புலிகள் ஆட்லறி தாக்குதல்களை நடத்தியதாகவும் - விசேட ஊடகத் தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது. (உ-ஒ)

## நேரடிப் பேச்சில் பங்குபற்றும் அரசுத் தரப்பின் பிரதிநிதிகள்!

கொழும்பு,மே11

அரசு - புலிகள் நேரடிப் பேச்சுக்களில் அரசுத் தரப்பில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகளின் பெயர்களைக் கூட அரசு தீர்மானித்துவிட்டதாகக் கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெண்டி, நெதர்லாந்துக்கான இலங்கைத் தூதர் லயனல் பெர

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணீர் புகைக் குண்டுகளை வீசி சிஹல உறுமயவின் பேரணி கலைப்பு!

**மருதானையில் சம்பவம்**

கொழும்பு,மே11

மாவனல்லவில் சிங்களவர்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்தும் -

சிங்கள மக்களுக்கு பாதுகாப்பு வழங்கவேண்டுமென்று கோரியும் -

'சிஹல உறுமய' நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் -

கொழும்பில் ஏற்பாடு செய்த பேரணியை கண்ணீர் புகைக் குண்டுகளை ஏவி பொலீஸார் கலைத்தனர்.

மருதானையில் உள்ள விகாரையில் ஒன்றுகூடிய சிஹல உறுமயவின் ஆதரவாளர்கள் சுமார் நூறு பேர் இந்தப் பேரணியை ஆரம்பிக்க முயன்றனர்.

அங்கு பெரும் எண்ணிக்கையில் திரண்டிருந்த பொலீஸார் பேரணியை நகரவிடாமல் தடுத்தனர். ஆனால் அந்தத் தடையையும் மீறி பேரணி நகர முனையவே பொலீஸார் கண்ணீர்

(14 ஆம் பக்கம் பாக்க)

## ஊர்வலங்கள், கூட்டங்களுக்கு ஒருவார காலத்துக்குத் தடை!

கொழும்பு,மே11

தெற்கில் சிங்களவருக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் பெரும் கலவரங்கள் தொடரக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளதையடுத்து -

அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் ஊர்வலங்கள் நடத்துவதற்கும் ஒன்று கூடுவதற்கும் ஒரு வார காலத்துக்கு அரசு தடை விதித்துள்ளது.

சிங்கள மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களைக் கண்டித்து தலைநகரில் சிங்கள அமைப்புகள் பேரணிகளையும் கண்டனக் கூட்டங்களையும் நடத்த முயற்சித்தாலும் -

வெள்ளிக்கிழமையான இன்று முஸ

(14 ஆம் பக்கம் பாக்க)

## தென்மராட்சிக்கு நஷ்டஈடு இல்லை மாவனல்லவுக்கு மட்டும் நஷ்டஈடா?

### சீறுகிறார் மகேஸ்வரன்

கொழும்பு,மே11

மாவனல்லவில் இடம்பெற்ற வன்செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்க முன்னர், படை நடவடிக்கையால் சேதமாகியுள்ள தென்மராட்சி மக்களின் உடைமைகளுக்கு ஏற்ற நஷ்டஈடு வழங்க வேண்டும்.

ஐ.தே.கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

அவசரகாலச் சட்டத்தை நாடு முழுவதும் மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணை மீதான விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் முழுநாளும் இடம்பெற்ற போது அதில் கலந்து கொண்டு பேசுகையில் மகேஸ்வரன் எம்.பி

(2 ஆம் பக்கம் பாக்க)

**மன்னார் வல்லுறவுச் சம்பவம்:**

## மேலும் ஒன்பது பொலீஸார் அடையாளம் காட்டப்பட்டனர்

கொழும்பு,மே11

மன்னாரில் இரு தமிழ்ப் பெண்களை கூட்டமாகச் சேர்ந்து பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி, சித்திரவதை செய்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக பொலீஸாரான மேலும் ஒன்பது சந்தேக நபர்களை பாதிக்கப்பட்ட இரு தமிழ்ப் பெண்களும் நேற்று அடையாளம் காட்டினர்.

இவர்களுடன் சேர்ந்து இது வரை இரு கடற்படையினர் மற்றும் 12 பொலீஸார் அடையாளம் காட்டப்பட்டிருக்கின்றனர்.

நேற்று மன்னார் நீதிமன்றத்தில், பதில் நீதிவான் கயஸ் சில்டான முன

(14 ஆம் பக்கம் பாக்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# காணாமற்போனோரின் உறவினர்கள் பொலீஸ் நிலையங்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,மே11

காணாமல் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளுக்காக உறவினர்களைப் பொலீஸ் நிலையத்துக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.

அழைக்கப்பட்டோரின் பெயர்களும் சமூகமளிக்க வேண்டிய பொலீஸ் நிலையங்களும் வருமாறு:-

**யாழ்-பொலீஸ் நிலையம்**

☆ யாழினி மகேஸ்வரன் - இல. 3/3, 2ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

☆ கோலேஸ்வரன் கதிரையலிங்கம் - இல.7A, விபுலானந்த வீதி, கொழும்புத்துறை, யாழ்.

☆ பூபாலசிங்கம் சுகுமார் - மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

☆ தேவபாலன் தர்மபாலன் - வீரபத்திரர் கோயிலடி, கச்சாய் வீதி, சாவகச்சேரி.

☆ வல்லிபுரம் ரகுகுமார் - தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி.

☆ பரமு சந்திரசேகர் - இல.143/1 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

☆ வேலுசாமி இராஜேந்திரன் - இல. 519, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

☆ அன்ரன் நிக்ஷன் கமரன் - இல.24, சென்ஜேம்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

☆ குஞ்சன் அருந்தவராஜா - வளர்மதி வீதி, கைதடி மத்தி, கைதடி.

☆ இரத்தினம் தவராஜா - கைதடி, நுணாவில், சாவகச்சேரி.

☆ செல்லையா பாலசிங்கம் - கைதடி, நுணாவில், சாவகச்சேரி.

☆ இராஜரத்தினம் ஸ்ரீதரன் - டச்சு வீதி, கோப்பாய் தெற்கு.

☆ அருளானந்தம் கனகரட்ணம் - அரசடி வீதி, இருபாலை.

☆ தங்கவேல் சந்திரகுமார் - தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி.

**பருத்தித்துறை பொலீஸ் நிலையம்**

☆ சித்தம்பிள்ளை சுதர்சன் - மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

☆ கணபதி சசிகரன் - அல்லாரை வடக்கு, கொடிகாமம்.

☆ நவரத்தினம் யோகேஸ்வரன் - கரவெட்டி தெற்கு.

☆ எஸ்.இராமேஸ்வரன் - வேவெல் வீதி, வல்வெட்டித்துறை,

☆ குமாரரத்தினம் இரத்தினகுமார் - ஆதிகோயிலடி, வல்வெட்டித்துறை.

**சுன்னாகம் பொலீஸ் நிலையம்**

☆ நாகலிங்கம் ஆறுமுகம் சரவணநாதன் - புலோலி வடக்கு, புலோலி.

☆ அருந்தவராஜா செல்வரட்ணம் - ஏழாலை கிழக்கு, ஏழாலை.

☆ மாணிக்கம் டெனி காஞ்சன் - கே.கே.எஸ். வீதி, மல்லாகம்.

☆ தம்பிராசா சந்திரமோகன் - பிளக் வீதி, சங்கானை.

☆ சின்னத்தம்பி செவ்வராஜன் ஏழாலை மேற்கு, சுன்னாகம்.

☆ கணபதிப்பிள்ளை கேதீசன் - மேற்பார்த்து நடேசபிள்ளை, குமாரலிங்கம் வீதி, இணுவில் கிழக்கு, இணுவில்.

☆ சிவனேஸ்வரி விஸ்வலிங்கம் - சுழிபுரம் மத்தி, சுழிபுரம்.

☆ பாலசிங்கம் உதயகுமார் - ஏ.ஜீ.ஏ.லேன், சுன்னாகம், உடுவில்.

(ஜ-9)

# தென்மராட்சிக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

யாழ்.மக்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்துக்கு வந்திருக்கும் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களும் இந்தக் கோரிக்கையை முன்வைக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

கடந்த வாரம் தென்மராட்சியில் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையின் நோக்கம் அந்தப் பிரதேசத்தில் எஞ்சியுள்ள வீடுகளையும் தென்னந்தோட்டங்களையும் அழிப்பதே என்பது புலனாகுகின்றது.

இந்த நடவடிக்கை தோல்வியிலேயே முடிவடையும் என்பது அரசுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் முன்கூட்டியே தெரிந்திருந்த போதிலும், தமிழ்மக்களின் வளங்களை அழிக்கும் நோக்குடன் அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

*தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதி*களான விடுதலைப் புலிகள் முன்வைக்கும் கோரிக்கைகளை, நிபந்தனைகள் என்று சித்தரித்து, பேச்சுக்களை ஆரம்பிக்காமல் பின்னடித்து வருகின்றது அரசு.

இந்த அரசிடம் இனப்பிரச்சினையைத் தீர்க்கத் திடமான திட்டம் ஏதும் இல்லை. இதனால்தான் பேச்சுக்களை ஆரம்பிப்பதை பிற்போட்டு, சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவுடன் ஆறு வருடங்களை ஓட்ட அரசு முனைந்துள்ளது.

மாவனல்லவில் முஸ்லிம் மக்களின் உடைமைகளை அழித்தது அரசு. ஆனால் 10,12 முஸ்லிம் எம்.பிக்கள் அரசுக்குத் தொடர்ந்து முண்டு கொடுத்து வருகின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பாக அரசு எடுத்த நடவடிக்கை - சில படை அதிகாரிகளைக் கொழும்புக்கு இடமாற்றம் செய்தது மட்டும் தான். நீதியான முறையில் அரசாங்கம் செயற்படுகின்றது என்றால் அந்தப் படையினரை முதலில் சிறையில் அடைத்திருக்கவேண்டும்.

குடாநாட்டு மக்கள் பாதுகாப்பு அற்ற - பாதுகாப்புக் கெடுபிடிகளில் சிக்கிக் கஷ்டமுறுகின்ற - நிலையில் உள்ளனர். தடை செய்யப்பட்ட ஓர் இனமாகவே அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்லவேண்டிய பயணிகள் கொமிஷன் கொடுத்தே செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளனர் என்பதைப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். விமானப் படையினரும், பாதுகாப்புப் பிரிவினரும் நடத்தும் வியாபாரத்தில் சிக்கி, அவர்கள் தவிக்கிறார்கள்.

ஒரு பயணி 12 ஆயிரம் ரூபாவை தரகுப் பணம் கொடுத்தே பயணம் மேற்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளார். விமானப்படை ஊழியர்கள 9 பேர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதிலிருந்து இந்த விடயத்தின் உண்மைத் தன்மை புலனாகின்றது.

கொழும்பிலிருந்து ஒரு பயணி யாழ்ப்பாணம் செல்ல 3 ஆயிரம் ரூபா கட்டணம் செலுத்த வேண்டும். ஒருவர் உயிரிழந்தால் அவரது சடலத்தை அங்கு எடுத்துச்செல்ல 15 ஆயிரம் ரூபா கட்டணம் செலுத்தவேண்டி உள்ளது.

பாதுகாப்பு அமைச்சும் விமானப் படையும் நடத்தும் இந்த வியாபாரத்தை, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் நிறுத்த முன்வருவாரா?

94ஆம் ஆண்டுகளில் பயணிகள் சேவையில் ஈடுபட்ட 'நரோமா' கப்பலில் பயணக் கட்டணமாக நூறு, இருநூறு ரூபா மட்டுமே அறவிடப்பட்டது. இன்று ஒருவழிப் பயணத்துக்கு ஆயிரத்து 575 ரூபா அறவிடப்படுகின்றது. இந்தக் கப்பல் சேவைக்கு வழித்துணை வழங்கும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கூட இந்தக் கட்டண உயர்வுக்கு துணைபோகின்றது - என்றார்.

(உ-3)

# விளையாட்டுத் துறை அபிவிருத்திக்கு போதிய நிதி உதவி வழங்கப்படும்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே11

வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் ஊடாக விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்ய போதிய நிதி உதவி அளிக்கப்படும்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

மாகாண விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்குச் செல்லவுள்ள இளம் விளையாட்டு வீரர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

ஈ.பி.டி.பியின் யாழ்மாவட்ட தலைமைச் செயலகத்தில் வைத்து அமைச்சர் விளையாட்டு வீரர்களைச் சந்தித்தார்.

இச்சந்திப்பின் போது அவர் மேலும் கூறியதாவது:-

சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கு விளையாட்டுத்துறை முக்கியமானது. அரசியல் கட்சி என்ற வகையில் வாய்ப்புக்களைப் பயன்படுத்தி யாழ்மாவட்ட விளையாட்டுத்துறையை ஊக்குவிக்க வேண்டும் எனும் எனது அவாவினைப் பூர்த்தி செய்யும காலம் வந்துவிட்டது.

கடந்த காலங்களில் இத்தகைய சந்தர்ப்பங்கள் இருந்திருக்கவில்லை கிடைத்த சந்தர்ப்பங்களையும் சரிவரப் பயன்படுத்தவில்லை. எனவே தற்போதுள்ள சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி எமது விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்ய நீங்கள் உரிமையோடு கேட்கலாம். விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்வதற்காக இவ்வருடத் திட்டங்களை விரைவாகச் செயற்படுத்தியுள்ளோம். இத் திட்டங்களின் வெற்றிகரமான நிறைவேற்றலுக்கு சுமுகமான சூழலும் நிலவ நீங்கள் யாவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

- என்றும் அவர் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளருமான கே.வி.குகேந்திரன், யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர், திருமதி ரூபசிங்கம், நல்லூர் பிரதேச சபைத் தலைவரும் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட உதவி அமைப்பாளருமான க.மணிபல்லவராஜன் (நிஷாந்தன்) ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

விளையாட்டு வீரர்கள் மாகாண மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள திருகோணமலைக்கு செல்வதற்குரிய பயணச் செலவுகள் அனைத்தையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்பின் பேரில் வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபை பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது.

சந்திப்பின் இறுதியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விளையாட்டு வீரர்களுக்குரிய சத்துணவுப் பொதிகளையும் வழங்கினார்.

(ஜ-5)

# சங்கானையில் இன்று சிரமதானம்

யாழ்ப்பாணம்,மே11

சுற்றாடல் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இன்று சங்கானை அரசினர் வைத்தியசாலை வளாகத்தில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்-

அபிவிருத்தித் தொண்டர்களாக நியமனம் பெற்றவர்கள், வலி.மேற்குப் பிரதேசசபைத் தலைவர் ந.திரிலோகநாதனின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்தச் சிரமதானத்தில் கலந்து கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொல்புரம் வழகம்பரை ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய சுற்றாடலில் இத்தகைய சிரமதானம் நேற்று இடம்பெற்றதாகவும் - விரைவில் மூளாய் வைத்தியசாலை வளாகத்தில் இயங்கும், கைதடி வயோதிபர் இல்லச் சுற்றாடலிலும் சிரமதானம் நடத்தப்படும் என்றும் - ந.திரிலோகநாதன் தெரிவித்தார்.

(ம)

# கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக

கிறிஸ்தவ - இஸ்லாமிய நாகரிகத் துறைத் தலைவரும்,

புனித ஆசீர்வாதப்பர் ஆலய பங்குத் தந்தையுமாகிய

**அருட்திரு. அன்ரன் மத்தாயஸ்**

அடிகளாரின் அன்புத் தந்தையார்.

## J.D. மத்தாயஸ்

அவர்களது பிரிவால் துயருறும் அடிகளாருக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கிறிஸ்தவ மன்றம்,
யா/கனகரத்தினம் ம.ம.வி.

(87653)

# துயர் பகிர்கின்றோம்

நல்லூர் - புனித ஆசீர்வாதப்பர் ஆலயப் பங்குத் தந்தை

**அருட்திரு. கலாநிதி அன்ரன் மத்தாயஸ்**

அடிகளின் அன்புத் தந்தை

## J.D.மத்தாயஸ்

அவர்களின் பிரிவால் கண்ணீர் சிந்தி நிற்கும் அவர் குடும்பத்தின் துயரில் நாமும் பங்குகொண்டு அவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அவர் ஆன்மா நித்திய இளைப்பாற்றி பெற இறைவனை வேண்டிக் கொள்கின்றோம்.

நல்லூர் - ஆசீர்வாதப்பர் ஆலய
மேய்ப்புப் பணிச்சபை,
பக்திச் சபைகள்,பங்கு மக்கள்.

(87663)

# கண்ணீர் அஞ்சலி

புனித ஆசீர்வாதப்பர் ஆலய பங்குத்தந்தை

**அருள்திரு.அன்ரன் மத்தாயஸ்**

அடிகளாரின் அன்புத் தந்தையார்.

## J.D.மத்தாயஸ்

அவர்களது பிரிவால் துயருறும் அடிகளாருக்கும் அவரின் குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பங்கு மக்கள்,
புனித ஆசீர்வாதப்பர் ஆலயம்.

(87660)

# மரண அறிவித்தல்கள்

## பெருமாள் நாகரெத்தினம்

வேலணை மேற்கு 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் 420, நாவலர் வீதி, ஆனைப்பந்தியைத் தற்காலிக வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய பெருமாள் நாகரத்தினம் *05.05.2001சனிக்கிழமை* கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பெருமாள் - தையலம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுப்பையா - பார்வதியின் அன்பு மருமகனும் இராசலட்சுமியின் அன்புக் கணவரும் கமலா, மலர், காலஞ்சென்ற சுஜாதாதேவி, சந்திரா (கொழும்பு), நகுலராணி (சமுர்த்தி முகாமையாளர், பிரதேச செயலகம், வேலணை), விமலராணி (குடும்பநல உதவியாளர், யாழ்.மாநகர சபை), நாகேஸ்வரன், பரமேஸ்வரன், தனுஜா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி, 2001 கணிதப்பிரிவு மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், தங்கராசா, விமலேந்திரன், குமார் (கொழும்பு), யசோதா ஆகியோரின் அன்பு மாமனாரும், இராஜிகா, சர்மிளா, சுபாஸ்கரன், காயத்திரி, ரஜிதா, நிரோஜா, கிருஷாந்தன், பிரகாஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.05.2001) வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆனைப்பந்தியில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலணை மேற்கு அம்பலவி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*425, நாவலர் வீதி,*
*ஆனைப்பந்தி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
நா.சிவா (மகன்)

(87665)

## வி.ம.குமாரசுவாமி

(இளைப்பாறிய மாவட்ட நீதிபதி, மல்லாகம்)

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட **V.M.** குமாரசுவாமி அவர்கள் நேற்று (10-05-2001) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நன்னித்தம்பி விசுவலிங்கம் (மலேயன் பென்சனியர்) - தங்கமுத்துஅம்பாள் தம்பதிகளின் மூத்த புதல்வரும், அன்னபூரணத்தின் அன்புக் கணவரும் விசுவலிங்கத்தின் (சட்டத்தரணி) அன்புத் தந்தையும் சௌமியாதேவியின் (தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி ஆசிரியை) மாமனாரும் **V.**சபாரத்தினம் (முன்னாள் வலி.வடக்கு விவாகப் பதிவாளர், ஆஸ்திரேலியா) **Dr.V.**குகதாசன் ஆஸ்திரேலியா),காங்கேசன்துறை **Dr.V.**நமசிவாயம், காலஞ்சென்ற திருமதி **R.**சற்குணதேவி, காலஞ்சென்ற **V.**தையல்நாயகி (முன்னாள் இராமநாதன் கல்லூரி ஆசிரியை) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற **T.**சங்கரப்பிள்ளை, திருமதி ஜீவரத்னம்பாள் தம்பதிகளின் மருமகனும் **T.S.**கார்த்திகேசு (முன்னாள் உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆசிரியர்), காலஞ்சென்றவர்களான திரு.திருமதி **M.**வேதாரணியம், கனகேஸ்வரன்(முன்னாள் அதிபர் பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலை) ஆகியோரின் மைத்துனரும், திருமதி **S.**கனகேஸ்வரன் (முன்னாள் ஆசிரியை தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி), திருமதி **S.**பஞ்சமசோதிநாயகம், திருமதி **V.**பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், **Dr.** ரட்ணவேலின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான உடுவில் நொத்தாரிசு **S.**சபாபதிப்பிள்ளை சட்டத்தரணி **S.**கனகசபாபதி, **S.**கதிரவேலு ஆகியோரின் மருமகனும், மலேசியா **N.**இளையதம்பி**(JP)** பெறாமகனும், சுப்பிரமணியம் சபாரத்தினம்(ஓய்வு பெற்ற நீதிமன்ற முதலியார்), சம்மந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை நேற்று (10-05-2001) வியாழக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*7 ஆம் கட்டை,*
*மல்லாகம்.*

தகவல்:
கு.விசுவலிங்கம்
(சட்டத்தரணி, மல்லாகம்)

(87664)

# நயினை செல்லும் பக்தர்கள் மீது சோதனைகளைத் தளர்த்த முடிவு

## மஹோற்சவ ஏற்பாட்டுக் கூட்டத்தில்

யாழ்ப்பாணம், மே 11

நயினை நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தில் கலந்து கொள்ளச் செல்லும் பக்தர்கள் மீதான பாதுகாப்பு சோதனைகள் தளர்த்தப்பட வேண்டும்.

நயினை மஹோற்சவ ஏற்பாடுகள் தொடர்பாக நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

உற்சவத்தில் கலந்து கொள்வதற்குச் செல்லும் பக்தர்களை யாழ். பஸ் நிலையப் பகுதியில் மட்டும் சோதனை செய்து விட்டு பஸ் நிலையத்தில் இருந்து குறிகாட்டுவான் இறங்குதுறை வரை பாதுகாப்புடன் அழைத்துச் செல்ல வேண்டும் என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்தக்கூட்டத்தில் தீவுப்பகுதி பிரதேச செயலர்கள், புங்குடுதீவு கடற்படை அதிகாரி, யாழ். மாநகரசபை பிரதிநிதிகள், வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் பிரதிநிதிகள், வேலணைப் பிரதேச சபைத் தலைவர், வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ்படை பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஜூன் 21 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நயினாதீவு நாகபூசணி அம்மன் வருடாந்த உற்சவத்தை ஒட்டி பின்வரும் ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

★ உற்சவ நாள்களில் ஆலயத்துக்குச் செல்பவர்கள் மீது பாதுகாப்புக் கெடுபிடி எதுவும் இருக்கக்கூடாது.

★ யாழ். பஸ்நிலையம் — குறிகாட்டுவான் இறங்குதுறை உட்பட பக்தர்கள் அதிகநேரம் தங்கிநிற்கும் இடங்களில் குடிதண்ணீர் மற்றும் தற்காலிக மலசல கூடங்களை அமைத்தல்.

★ குறிகாட்டுவானுக்கும் நயினாதீவுக்கும் இடையில் உற்சவகாலத்தில் படகுச் சேவைகள் நடத்துபவர்கள் பிரதேச சபைக்கு ஆயிரம் ரூபா கட்டணம் செலுத்த வேண்டும்.

★ சுன்னாகத்தில் இருக்கும் 250 கே.வி. ஜெனரேட்டரை நயினாதீவுக்கு எடுத்துச்செல்வதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அனுமதியைப் பெறவேண்டும்.

★ உற்சவ காலங்களில் பக்தர்களின் நலன் கருதிக் குறிகாட்டுவானுக்கும் யாழ். பஸ் நிலையத்துக்குமிடையில் 40 பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்தல்.

★ ஆலயச் சுற்றாடலில் மக்களின் நலன்களைக் கவனிக்கும் பொருட்டு சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை மற்றும் மக்கள் நலன்காக்கும் பிரிவைச் சேர்ந்த தொண்டர்கள் கடமையில் ஈடுபடுவார்கள்.

★ குறிகாட்டுவானுக்கும் நயினாதீவுக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் படகுகளில் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையைச் சேர்ந்த இருவர் கடமையில் ஈடுபடுவார்கள்.

(ஐ-5)

### கடை ராக்கைகளைத் தூக்கி வீசிய

# மாநகர சபை நடவடிக்கைக்கு யாழ். வணிகர் கழகம் ஆட்சேபம்

யாழ்ப்பாணம், மே 11

யாழ். நவீன சந்தையின் உள்ளே கடைகளின் முன்பாகக் காணப்பட்ட 'ராக்கை'கள் மாநகரசபை அதிகாரிகளால் அகற்றப்பட்ட சம்பவம் குறித்து யாழ். வணிகர் கழகப் பிரதிநிதிகள் தமது ஆட்சேபத்தையும் கவலையையும் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் யாழ். மாநகர சபை அலுவலகத்தில் பதில் ஆணையாளரைச் சந்தித்த கழகப் பிரதிநிதிகள் தமது ஆட்சேபத்தைத் தெரிவித்தனர்.

விடுமுறை தினமான கடந்த திங்கட்கிழமை நவீன சந்தை கடைகள் அனைத்தும் பூட்டப்பட்டிருந்த வேளை அங்கு சென்ற மாநகர சபை அதிகாரிகள் 'ராக்கை'கள், பலகைத் தட்டுகள் மற்றும் சட்டங்களை தூக்கி வீசிச் சேதப்படுத்தியுள்ளனர். கடை உரிமையாளர்கள் எவரும் இல்லாத போது மேற்கொள்ளப்பட்ட மிகவும் கீழ்த்தரமான இந் நடவடிக்கையை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

இதேவேளை- யாழ். நவீன சந்தைக்கு குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்தித் தருமாறும், மலசல கூடங்களைப் பராமரிக்க வேலையாள்களை நியமிக்குமாறும் வர்த்தகர்கள் சார்பில் கோருகின்றோம்— என்று வணிகர் கழகப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

(ஐ-9-4)

## இணுவிலில் தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், மே 11

இணுவில் மஞ்சத்தடி அருணகிரிநாத சிவசுப்பிரமணியர் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது

தீர்த்தத்திருவிழா 14 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும். அன்றைய தினம் பெரிய சந்நியாசிரியாருடைய திருவுருவப் படம் வீதியுலாக் கொண்டுவரப்பட்டு தொடர்ந்து அன்னதானம் இடம்பெறும். (ம-7)

## யாழ். இளைஞருக்கு எதிராக வழக்குத் தாக்கல்

கொழும்பு, மே 11

பூநகரி இராணுவ முகாம் மீதான தாக்குதலில் சம்பந்தப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு, விடுதலைப்புலி உறுப்பினர் எனக் கூறப்படும் ஒருவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இராமலிங்கம் இதயநாதன் என்ற இளைஞருக்கு எதிராகவே சட்டமா அதிபர் வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

கடந்த புதன்கிழமை மேன் நீதிமன்றில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது சாட்சியங்களாகப் பெயர் குறிக்கப்பட்ட பொலீஸ் உத்தியோகத்தர்களுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டது. (க-7)

## பற்றைகள் தீ வைத்து அழிப்பு

கோப்பாய், மே 11

கோப்பாய், இருபாலை தரவைப் பகுதிகளில் வளர்ந்திருந்த சப்பைப் புற்கள் மற்றும் பற்றைகள் தீமூட்டி எரிக்கப்பட்டுள்ளன.

பற்றைகள் தீயில் எரிந்து கொண்டிருந்ததால் நேற்றுக் காலை முதல் அப் பகுதியில் பெரும் புகை மூட்டம் காணப்பட்டது. (ஐ-72)

### மாவனல்ல வன்முறைச் சம்பவங்கள்

# அமைச்சர்கள் தொடர்பிருந்தால் தண்டனை வழங்க வேண்டும்

## அமைச்சர் ஜயரத்ன கூறுகிறார்

கொழும்பு, மே 11

அண்மையில் மாவனல்லவில் இடம்பெற்ற வன்முறைகளுக்குப் பொறுப்பானவர்களை உடனடியாக இனங்கண்டு அவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என பொதுமக்கள் ஐக்கிய முன்னணி செயலாளரும் அமைச்சருமான டி. எம். ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

வன்முறையாளர்களுடன் அமைச்சர்கள் எவரும் தொடர்புபட்டிருந்தால் அவர்களின் தராதரம் பாராது கைதுசெய்து சிறையில் அடைக்க வேண்டும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

தமது தொகுதியான கம்பளையில இவ்வாறான வன் செயல்களுக்கு இடமில்லை என்பதைச் சுட்டிகாட்டியுள்ள அமைச்சர் அவ்வாறான ஒரு நிலையேற்படுமானால், அதனைக் கட்டுப்படுத்த கடுமையான முறையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

## புலமைப் பரிசில் கொடுப்பனவு

வலிகாமம் தெற்கு. மே 11

தரம் 6 தொடக்கம் 13 வரையானவகுப்புகளில் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் சித்தியடைந்த மாணவர்களுக்கான 2001 ஏப்ரல் 30 ஆம்திகதி வரையான கொடுப்பனவுகள் உடனடியாக வழங்கப்பட உள்ளன.

அதனால் அதற்குரிய விண்ணப்பப் படிவங்களை உடன் அனுப்பி வைக்குமாறு வலிகாமம்வலயக்கல்விப்பணிப்பாளர் வீ. இராசையா பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

கடந்த காலத்துக்குரிய நிலுவைகள் இதன் பின்பே வழங்கப்படும். எனவே 2000.12.31 க்கு முற்பட்ட காலக்கொடுப்பனவுப் பத்திரங்களையும் வலயத்துக்கு அனுப்பி வைக்குமாறு பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(க-152)

## வறிய சிறுவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள்

கோப்பாய், மே 11

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலைப் பிள்ளைகளுக்கு சீருடை மற்றும் கற்றல் உபகரணங்கள் இன்று வழங்கப்படவுள்ளன.

கோப்பாய் பிரதேச செயலகத்தில் வைத்து இப்பொருள்கள் வழங்கப்படும் என்றும்—

அச்சமயம் சம்பந்தப்பட்டோரின் பிரிவு கிராம அலுவலர்களையும் அங்கு சமுகமளிக்குமாறும்—

பிரதேசசெயலர் க. கேதீஸ்வரன் கேட்டுள்ளார்.

(ஐ-72)

## 'கவின் தமிழ்' மலருக்கான ஆக்கங்கள்

வழமைபோல் இவ்வருடமும் வடக்கு-கிழக்கு மாகாண தமிழ்மொழித் தினமலரான ''கவின்தமிழ்'' வெளியிடப்படும் என வடக்கு — கிழக்கு மேலதிக கல்விப்பணிப்பாளர் எஸ். மகாலிங்கம் அறிவித்துள்ளார்.

''கவின் தமிழ்'' மலரை வெளியிடுவதற்குத் தகுதியான படைப்பாளர்களிடம் இருந்து கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், குறுநாடகம், துணுக்குகள் போன்றவற்றைப் பெற்று அனுப்பி வைக்குமாறு பணிப்பாளர் மகாலிங்கம் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாகப் பாடசாலை அதிபர்களிடம் கோரியுள்ளார். (க-152)

# விளையாட்டு நிகழ்வுகள்

வலி. வடக்கு, மே 11

நல்லூர்ப் பிரதேச சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களுக்கு இடையேயான தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கோண்டாவில் ஸ்ரீ நாராயணா சனசமூக நிலைய விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள கால் இறுதி ஆட்டங்களில் கலந்து கொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:

★ கொக்குவில் காளிகோவிலடி சனசமூகநிலையம் அணி எதிர் கோண்டாவில் ஸ்ரீ நாராயணா சனசமூக நிலைய "எ" அணி.

★ திருநெல்வேலி முடமாவடி ஞானவைரவர் சனசமூக நிலைய அணி எதிர் கோண்டாவில் மக்கள் முன்னேற்றக் கழக அணி (க-86)

★ ★ ★

யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் கொக்குவில் ஸ்ரீவராகி விளையாட்டுக் கழகம நடத்தி வரும் தாச்சிச்சுற்றுப்போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழகமும் எதிர் உடுவில் இந்து விளையாட்டுக் கழகமும் பங்குபற்றுகின்றது. (க-86)

★ ★ ★

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் ஈ. எஸ். பேரம்பலம் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் நடத்தி வரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

**இன்று**

★ பிற்பகல் 1 மணி — ஜொலிஸ்ரார் வி. க. எதிர் சென்ரலைட்ஸ் வி. க.

**நாளை**

★ காலை 8.30 மணி— யாழ். பல்கலைக்கழக வி. க. எதிர் ஜொனியன்ஸ் வி. க.

★ பிற்பகல் 1 மணி—யங்ஸ்ரார் வி. க. எதிர் அரியாலை வி. க.

(-3)

★ ★ ★

கோப்பாய், மே 11

கோப்பாய்க் கோட்ட மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் இன்றும் நாளையும் (வெள்ளி, சனி) நடைபெறவுள்ளன.

இன்றைய போட்டிகள்கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்திலும் கோப்பாய் மகாவித்தியாலய மைதானத்திலும்—

நாளைய போட்டிகள் அனைத்தும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்திலும் நடைபெறும் என்று கோட்டக் கல்வி அதிகாரி இ. சிவஞானசுந்தரம் தெரிவித்தார்.

(ஐ-72)

## தோட்டங்களில் நத்தைகள் பெருக்கம்

கோப்பாய், மே 11

கோப்பாய், நீர்வேலி உரும்பிராய்ப் பகுதிகளில் தோட்டங்களிலும் வீட்டுத் தோட்டங்களிலும் பெருமளவு நத்தைகள் காணப்படுகின்றன. இவை பயிர்களை அழித்து நாசம் செய்து வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

தோட்டங்களில் முன்பு என்றும் இல்லாதவாறு நத்தைகள் பெருகியிருக்கின்றன. இதற்கான காரணம் என்ன என்பது தெரியவில்லை என்று விவசாயி ஒருவர் தெரிவித்தார் வீடுகளிலும் பூஞ்செடிகளில் நத்தைகள் காணப்படுகின்றன.

நத்தைகள் பெருகியதற்கான காரணத்தை அறிய விவசாயத் திணைக்களத்தின் உதவி நாடப்பட்டுள்ளது.

(ஐ-72)

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம், மே 11

மக்கள் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலை ஆசிரியர்களுக்கு நடத்தப்பட்ட முதலுதவி, வீதி ஒழுங்கு விரிவுரையாளர் பயிற்சி நெறியில் பங்குபற்றியவர்களுக்கு மேலதிக செய்முறைப் பயிற்சியும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறவிருக்கின்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் க. சண்முகநாதனும் சிறப்பு விருந்தினராக வீதி ஒழுங்குக்குப் பொறுப்பான பொலீஸ் அதிகாரி எஸ். ஐ. உடுவெலவும் பங்குபற்றுவர்.

(ஐ-3)

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், மே 11

கட்டுநாயக்காவில் உள்ள தொழில் நுட்பவியல் பயிற்சி நிறுவகத்தில் எந்திரவியல் விஞ்ஞான டிப்ளோமா 4வருட பயிற்சி நெறிக்கு எந்திரவியல் சிறப்பு பயிலுநர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் கோரப்பட்டுள்ளன.

ஜி சீ ஈ (உயர்தர) பரீட்சையில விஞ்ஞான, எந்திரவியல் பாடங்களில் சித்தியடைந்த 18 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டவர்களிடம் இருந்து இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜூன் மாதம் 6 ஆம் திகதிக்கு முன் இதற்குரிய விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவித்தல் ஏப்ரல் 27 ஆம் திகதி வெளியான வர்த்தமானியிலும் பிரசுரமாகியுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களையும் விண்ணப்பப்படிவத்தையும் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையில் இல. 7, கோயில் வீதியில் உள்ள வடமாகாண அலுவலகத்தில் பெறலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

(ம-5)

## அத்தாடிப்பகுதியில் கசிப்பு விற்பதால் மக்கள் சிரமம்

அச்சுவேலி, மே 11

புத்தூர் கிழக்கு பெரியதம்பிரான் கோயில் அத்தாடிப் பகுதியில் கசிப்பு விற்பனை நடைபெறுவதால் பொது மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாவதாகப் புகார் செய்யப்படுகின்றது.

அத்தாடிப் பகுதியில் சட்டவிரோத கசிப்பு விற்பனை செய்யப்படுவதால் மாணவர்கள், பெண்கள், குழந்தைகள் பல்வேறுவிதமான துன்புறுத்தல்களுக்கு உள்ளாகி இயல்பு நிலையில்நடமாட முடியாமல் இருப்பதாகக் கூறப்படுகிறது.

(க-11)

# கொழும்புத்துறை மக்கள் மீளக்குடியமர இதுவரை அனுமதிக்காதது குறித்துக் கவலை

## இந்து இளைஞர் மன்றம் அமைச்சர் டக்ளஸுக்கு மகஜர்

அரியாலை, மே 11

கொழும்புத்துறை பிரதேச மக்கள் இடம்பெயர்ந்து ஒரு வருடம் பூர்த்தியாகும் நிலையில் அவர்களைத் தங்களின் இருப்பிடங்களில் மீளக்குடியமர்த்துவதற்கான எந்தவித நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படாதது கவலைதரும் செயலாகும்.

கொழும்புத்துறை மேற்கு இந்து இளைஞர் மன்றம் வடக்கு புனர்வாழ்வு புனரமைப்புமற்றும்வடக்கு-கிழக்கு தமிழ் விவகார அமைச்சருமான கே. என். டக்ளஸ் தேவானந்தாவுக்கு மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தப் பகுதியில் மக்களை மீளக்குடியமர்த்துவது சம்பந்தமாக மன்றத் தலைவர் வ. பிரதாப் தலைமையிலான குழு ஒன்று அண்மையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேரில் சந்தித்து மகஜர் ஒன்றையும் கையளித்தது.

எமது பிரதேச மக்கள் கடந்த ஒரு வருடமாக இடம்பெயர்ந்து பல்வேறு பகுதிகளிலும் பலதரப்பட்ட துன்ப, துயரங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

இப்பகுதியில் உள்ள ஆலயங்கள் மூடப்பட்டு பூஜை வழிபாடுகள் இன்றி காணப்படுவது மனவேதனை தருகின்றது என்று அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சரின் கவனத்துக்கு இந்து இளைஞர் மன்றம் முன்வைத்துள்ள கோரிக்கைகள் வருமாறு:-

★ விபுலானந்தர் வீதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் வேறு இடத்திற்கு அகற்றப்பட்டு ஆலய பூஜை வழிபாடுகளில் மக்கள் கலந்து கொள்ளவும், பாடசாலை மாணவர்கள் சிரமமின்றிச் செல்லவும் வழி செய்தல்.

★ சுவாமியார் வீதியில் அமைக்கப்பட்டிருக்கும் இராணுவ முகாம்களை வேறு இடத்திற்கு மாற்றி அப்பகுதியின் மக்களை மீளக்குடியமரச் செய்தல்.

★ கொழும்புத்துறைப் பிரதேசம் முழுவதும் மக்களை மீளக்குடியமர அனுமதி வழங்கப்படவேண்டும்.

★ துறைமுகச்சந்தி வரை மக்கள் பாதுகாப்புக் கெடுபிடிகள் இன்றி சென்று வர அனுமதிக்கப்பட வேண்டும்.

★ சேதமடைந்த வீடுகளுக்கு உடனடியாக நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும்.

(க-17)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி





அமரர்
**கார்த்திகேசு இராமலிங்கம்**

திருமதி
**இராமலிங்கம் தங்கம்மா**

10-04-1922 ← உதிப்பு → 04-06-1927
15-04-1998 ← உதிர்வு → 06-05-1998

**திதி:- 11-05-2001**

அன்பின் தெய்வங்களே!
பாசத்தால் எமைக் காத்து
பார்தனில் எமைத் தவிக்கவிட்டு
நிலைக்காத இவ்வுலக வாழ்வினில்
நிலையான வாழ்வு தேடிச் சென்றீர்களோ?

உங்கள் ஆத்மா சாந்தியடையக் கண்ணீர் மல்கி வேண்டி நிற்கும்:

இ. இராசேந்திரன் (மகன்) - குடும்பத்தினர்.
[இ. மி. ச.]
ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.

(87561)

## இறைபத நிறைவில் இணைந்த ஓராண்டு நினைவு





**மனுவேற்பிள்ளை குணரத்தினம்**
(ஊழியர் உணவுத்திணைக்களம், கச்சேரி, யாழ்ப்பாணம்)

**குணரத்தினம் கிறிஸ்ரென்சன் நிரோஜன்**
(உயர்தர மாணவன், சென். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்)

பிறப்பு → இறப்பு ← பிறப்பு
31-01-1947 11-05-2000 15-02-1982

பெற்றவனும் பெற்றெடுத்த மகனும் ஒன்றாய்ப்
பிரிந்த துயர் நெஞ்சத்தைப் பிளந்த வேளை
பற்றியெரிந் திருக்கண்ணின் மணிகள் தம்மைப்
பறிகொடுத்துக் கதறியதை மறப்போமோ? நாம்
இற்றைவரை ஓராண்டா கழிந்தது இங்கே
இமைப் பொழுதே பறந்தது போல் துடிக்கின்றோமே!
சொற்கடவா மகனே! எம் குடும்பதி தாரணே!!
சோதியன் பாதம் உமை வந்து காண்போம்.

இவர்களின் ஆன்ம சாந்திக்காக இன்று (11-05-2001) வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ் அடைக்கல அன்னை ஆலயத்திலும், யாழ். புனித மரியாள் பேராலயத்திலும், பெரியவிளான் புனித யுவானியார் ஆலயத்திலும் திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்படும்.

பிரிவால் இதயம் பிளந்திருக்கும்:
துணைவி, தாய், பிள்ளைகள்,
சகோதரர், உற்றார், உறவினர்கள்.
பெரியவிளான்
(திருகோணமலை)

யாழ்ப்பாணம்.

(87808)

## சித்தன்கேணி கணேசாவுக்கு ரெலிகொம் காணி சுவீகரிப்பு

யாழ்ப்பாணம், மே 11

சித்தன்கேணி ஸ்ரீகணேசா வித்தியாலயத்தின் கல்விச் செயற்பாட்டுக்கு உதவியாக அருகில் உள்ள ரெலிகொம் காணியைச் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு, மற்றும் வடக்கு — கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எடுத்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட தலைமைச் செயலகத்தில் சித்தன்கேணி ஸ்ரீகணேசா பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், அமைச்சரைச் சந்தித்து விடுத்தவேண்டுகோளுக்கு அமையவும்—

சங்கானைக் கல்விக் கோட்ட அதிபர் சங்கம், சித்தன்கேணி கலைவாணி சனசமூக நிலையம், சித்தன்கேணி நாமகள் சனசமூக நிலையம் மற்றும் பொதுமக்களும் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாகவுமே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, ரெலிகொம் நிறுவனத்துக்காக வேறு ஒரு காணி வழங்கவும் உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஸ்ரீகணேசா பாடசாலை தனது கல்விச் செயற்பாடுகளுக்காக 1985 ஆம் ஆண்டு முதல் இக் காணியைப் பயன்படுத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது.

## கோழித்தீனுக்குத் தட்டுப்பாடு; பண்ணையாளர்கள் பாதிப்பு;

குடாநாட்டில் கோழித்தீன் வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதை அடுத்து வர்த்தகர்கள் பதுக்கி வைத்து அதிகரித்த விலையில் விற்பனை செய்து வருகின்றனர்.

கோழித்தீன் வகைகளில் ஆரம்ப உணவான 'குஞ்சுத்தீன்' இடை நிலைப் பருவ உணவான 'வளர்குஞ்சுத்தீன்' ஆகியவற்றுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் கோழிவளர்ப்போர், பண்ணையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கோழி முட்டை இடும் பருவத்திற்கு முந்திய நிலையில் பயன்படுத்தப்படும் இரண்டுவகை உணவுகளும் உரிய முறையில் பாவிக்கப்படாதவிடத்து கோழிகள் உரிய பயனைக்கொடுக்காது பெரும் நஷ்டம் ஏற்படும் என்று பண்ணையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கொழும்பில் இருந்துவரும் கோழித்தீன் வகைகள் வந்திறங்குவதில் உள்ள தாமதமும் யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் மேற்படி கோழித்தீன் வகைகளை உரிய காலத்தில் உற்பத்தி செய்யாததும்தான் தட்டுப் பாட்டுக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

(க-11)

### அகில இலங்கை ரீதியில்

## இவ்வருடமும் பாடசாலைகளில் தமிழ்மொழித் தினப் போட்டிகள்

வலிகாமம் தெற்கு, மே 11

அகில இலங்கை தமிழ் மொழித்தினம் இம்முறையும் பாடசாலை, வலயம், மாகாணம், தேசிய மட்ட நிலைகளில் நடைபெறவுள்ளன.

கல்வி அமைச்சு செயலாளர் வைத்திய கலாநிதி தாரா டி மெல் பாடசாலை அதிபர்களுக்கு தமிழ்மொழி தின மாற்றம் செய்யப்பட்ட சுற்று நிருபத்தை அனுப்பி வைத்துள்ளார்.

தமிழ்மொழித் தின சுற்று நிருபத்தில் ஏற்கனவே குறிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. சில நிகழ்ச்சிகளிலேயே மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பாடசாலை மட்டத்தில் மே மாத இறுதிக்குள்ளும் வலய மட்டத்தில் ஜூன் மாத இறுதிக்குள்ளும் மாகாண மட்டத்தில் ஜூலை மாத இறுதிக்குள்ளும் போட்டிகள் இடம்பெற வேண்டும் எனவும் —

மாகாணக்கல்விப் பணிப்பாளர்கள் தேசிய நிலைப் போட்டிக்கான விண்ணப்பங்களை ஜூலை 31 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்க வேண்டும் எனவும் --

தேசிய நிலைப் போட்டிக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தாரா டி மெல் மேலும் அறிவித்துள்ளார்.

(க-151)

உதயன்

## திருப்பமாக மாறலாம்

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்களைத் தொடக்கிவிடுவதற்கான நோர்வேயின் முயற்சிகள் தொடர்ந்துகொண்டிருக்கின்றன. விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் கொழும்புக்கு வந்து அரசதரப்புடன் பேசுவதும் லண்டனுக்குச் சென்று விடுதலைப் புலிகள் பிரமுகர் அன்ரன் பாலசிங்கத்துடன் ஆலோசனை நடத்துவதுமாக சலிப்பின்றி ஓடித்திரிகிறார்.

அவர் தூது செல்ல ஆரம்பித்து ஆறு மாதங்கள் கடந்துவிட்ட போதிலும், அவரது முயற்சி காயாகவே இன்னும் உள்ளது. அது கனிவதற்கு எத்தனை காலமாகும் என்பதனை அவராலேனும் மதிப்பிட்டுக் கூற முடியுமோ தெரியவில்லை.

அவரது முயற்சி வெற்றி பெற வேண்டும்; அரசு - விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை நடைபெற வேண்டும்; பேச்சுவார்த்தையின் பயனாக இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வு ஒன்று கிடைக்க வேண்டும்; மக்கள் அமைதியாகவும் சமத்துவமாகவும் வாழும் நிலை எய்தப்பட வேண்டும்; என்பதே மக்களில் மிகப் பெரும்பாலானோரின் விருப்பமாகும்.

பேச்சுவார்த்தை வெற்றி பெறுவதற்கு அது என்ன அடிப்படையில் நடைபெறப் போகிறது என்பது மிகவும் பிரதானம். அரசாங்கம் ஏற்கனவே நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து ஒரு வகையில் "நிராகரிக்கப்பட்ட", காலாவதியான அதிகாரப் பரவல் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டே பேச்சுவார்த்தை நடைபெறும் என்று அரசாங்கத் தரப்பினர் சார்பில் இதுவரை கூறப்பட்டு வந்தது. ஆனால் அதில் மாற்றம் உள்ளதாக இப்போது கூறப்படுகிறது.

சமஷ்டி முறையிலான அரசமைப்புத் தொடர்பாக அரசாங்கம் இப்போது ஆராய்ந்து வருகிறது. அதனை அடிப்படையாக வைத்தே அரசு விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தும் -

பேச்சுவார்த்தையின் போது கடந்தகாலத்து தீர்வுயோசனை குறித்துப் பிரஸ்தாபிக்கப்படமாட்டாது. வேண்டுமானால் அந்தத் தீர்வு யோசனையில் அடங்கியுள்ள நல்ல அம்சங்களை மீள் பரிசீலனை செய்யலாம் - என்று அரசமைப்பு விவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தகவல் வெளியிட்டிருப்பதாக செய்திகள் வந்துள்ளன.

அந்தத் தகவல் உண்மையாயின்- சமஷ்டித் தீர்வை முன்வைத்துப் பேச்சுக்கள் நடக்குமாயின் - பேச்சுவார்த்தை வெற்றியளிக்கும் சாத்தியம் நிறையவும் உண்டு என்று இப்போதே நம்பிக்கை கொள்ளலாம். சமஷ்டி அரசமைப்பை உருவாக்குவதனை இலக்காக வைத்து பேச்சுக்கள் நடத்துவது என்பது பெரும் திருப்பமாக் மாறும்.

தமிழ் மக்களின் பிரதான அரசியல் அபிலாஷைகளில் ஒன்று தன்னாட்சி அதிகாரமுள்ள தமிழரசு உருவாக்கப்படவேண்டும் என்பதாகும். சமஷ்டி அரசமைப்பிலேயே அது சாத்தியம். ஒற்றையாட்சி முறையின் கீழ் உருவாக்கப்படும் அதிகாரப் பரவல் போன்றவை தமிழ் மக்களுக்குப் பெரிதாக எதனையும் கொண்டு வரமாட்டா.

சமஷ்டி ஆட்சி முறை என்பது நாட்டை துண்டாடுவது என்ற தவறான கருத்து சிங்கள மக்களிடையே, பேரினவாதிகளால் விதைக்கப்பட்டதால் அந்தச் சொல்லைக் கேட்டதுமே ஒவ்வாமை கொள்ளும் நிலை அவர்களுக்கு. அதனாலேயே ஓரளவு சமஷ்டிக்கு வகை செய்த பண்டா - செல்வா ஒப்பந்தத்தை கிழித்தெறியவைத்தனர்.

இப்போதும் ஐக்கிய தேசியக் கட்சி, ஜனதா விமுக்திப் பெரமுன, சிஹல உறுமய ஆகிய கட்சிகள் சமஷ்டி அரசமைப்பு முறையை ஏற்குமா என்பது சந்தேகமே. சிங்களப் பேரினவாதம் அத்தகைய ஒரு தீர்வுக்கு எதிராகக் கெம்பி எழமாட்டாதா என்பதும் கேள்வியாகிறது.

இத்தகைய ஒரு போக்கினால் நாடு இதுவரை கண்ட அழிவுகளை மனதிற் கொண்டேனும் அந்தச் சக்திகளைத் திருத்தவேண்டிய பொறுப்பும் அரசின் மீதே விழும்.

எதற்கும் பேச்சுகள் புரிந்துணர்வுடனும் சுமுகமாகவும் தொடங்க வேண்டும். அதுவே முதற் தேவை.



ஐ.ஐ.எஸ். [illegible] நிறுவனத்[illegible]ர் ஐந்தாவது நிறுவன தின விழா அண்மையில் சென்.ஜோன்ஸ் கல்லூரியி[illegible] இடம்பெ[illegible]றது. நிகழ்வி[illegible] கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட வர்த்தகவங்கி யாழ். கிளை முகாமை[illegible] எஸ்.ரவீந்திரா மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் நிறுவனத்தின் பணிப்[illegible]ர் கே.விக்னே[illegible], பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழக கணனி விஞ்ஞானத்துறைத் தலை[illegible] டாக்டர் எஸ்.மகேசன் மற்றும் அவரது பாரியார் ஆகியோரும் காண[illegible]றனர்.

நி[illegible] பணிப்பாளர் மற்றும் ஊழியர்களால் பிரதம விருந்தினர் விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்ப[illegible] போது எடுக்கப்பட்ட படத்தை அடுத்துக் காணலாம். (ம)

## கடவுச்சீட்டு விண்ணப்பப்படிவம்

யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் கடவுச்சீட்டு விண்ணப்பப்படிவம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கொழும்பிலிருந்து கப்பல் மூலம் அண்மையில் எடுத்துவரப்பட்ட இரண்டாயிரத்து 500 கடவுச்சீட்டு விண்ணப்பப்படிவங்கள் பிரதேச செயலகங்களுக்கு யாழ்.செயலகத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

## 'சிறுவர் குரல்' செய்தி மடல்

யாழ்.செயலகத்தில் இயங்கும் சிறுவர் கண்காணிப்புக் குழுவினால் சிறுவர்குரல் என்னும் செய்தி மடல் வெளியிடப்பட்டுள்ளது. சிறுவர்களின் ஆக்கங்களைத் தாங்கி வரும் சிறுவர் குரலின் பதிப்பாசிரியர்களாக யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம், தெல்லிப்பழைப் பிரதேச செயலர் திருமதி ப. திலகநாயகம் மற்றும் எம்.கவிதரன் ஆகியோர் கடமையாற்றி வருகின்றார்கள்.

# குறிகாட்டுவான் துறையில் குடிதண்ணீர் வசதி இல்லை

## படகுப் பயணிகள் பெரு[illegible] அவ[illegible]

யாழ்ப்பாணம்,மே11

குறிகட்டுவான் இறங்குதுறைக்கு வரும் பயணிகள் கடந்த சில நாள்களாகக் குடிதண்ணீர் இன்றி அவதிப்படுகின்றனர்.

குறிகட்டுவான் இறங்குதுறையில் பயணிகளின் நன்மை கருதி வேலணை பிரதேச சபை குடிதண்ணீர் விநியோகித்து வந்தது. கடந்த ஓரிரு வாரங்களாக குடிதண்ணீர் விநியோகிப்பது நிறுத்தப்பட்டதை அடுத்தே பயணிகள் அவ[illegible]ப்பட்டு வருகின்றனர்.

தீவுகளுக்குப் பயணம் செய்ய வரும் பயணிகள் கடும் வெயிலுக்கு மத்தியில் குடிதண்ணீர் இன்றி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (ஜ-7)

# போர் செலவின விவரங்களை கோருகிறார் எதிர்க்கட்சி எம்.பி.

## நாடாளுமன்றுக்கு தனிநபர் பிரேரணை

கொழும்பு,மே11

1994 தொடக்கம் பாதுகாப்புத் தேவைக்கு ஒதுக்கப்பட்ட பணம் சரியான முறையில் செலவு செய்யப்பட்டுள்ளதா? எங்கே எப்போது செலவிடப்பட்டது? இந்த விவரங்களைக் கோருகிறார் கொழும்பு மாவட்ட (ஐ.தே.க.) எம்.பி. ரவி கருணாநாயக்க.

நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு அனுப்பிவைத்துள்ள தனிநபர் பிரேரணையில், 1994 தொடக்கம் இதுவரை 389 பில்லியன் ரூபாவை நாடாளுமன்றம் பாதுகாப்புக்கு ஒதுக்கியிருக்கிறது. கடந்த ஐந்து மாதங்களில் இராணுவப் பின்னடைவுகள் ஏற்பட்டிருக்கின்றன.

இதேவேளை இலங்கைக்கான ஆயுத விற்பனை தொடர்பாக பிரிட்டிஷ் கம்பனியொன்று இலங்கை அரசுக்கெதிராக ஊழல் காரணங்களை முன்வைத்து வழக்குத் தொடரவிருப்பதாக பிரிட்டிஷ் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

எனவே பாதுகாப்புக்கு ஒதுக்கப்படும் பணம் எவ்வகையில், எங்கே செலவு செய்யப்பட்டது என்பது பற்றி திட்டவட்டமான பதிலை இச்சபை எதிர்பார்க்கிறது. பணம் முன் கவனத்துடனும், புத்திசாலித்தனமாகவும் செலவு செய்யப்பட்டுள்ளதா?

இவ்வாறு அந்தப் பிரேரணையில் கோரப்பட்டுள்ளது. (க)

## எதிர்வரும் 19 ஆம் திகதி

# யாழ்.மத்திய கல்லூரியில் 'மக்கள் குறை நிவர்த்தி சேவை'

யாழ்ப்பாணம்,மே11

யாழ். மாவட்டத்தில் 'மக்கள் குறை நிவர்த்தி சேவை'யை நடத்துவதற்கான ஏற்பாடுகளில் யாழ். செயலக அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

எதிர்வரும் 19ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரியில் இந்த சேவை யாழ்.அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன மற்றும் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபையின் பிரதம செயலாளர் உட்பட அனைத்துச் செயலாளர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தச் சேவையை நடத்துவது தொடர்பாக யாழ்.அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் திணைக்களத் தலைவர்கள் மற்றும் யாழ்.செயலக அதிகாரிகளுடன் கடந்த சில நாள்களாக ஆராய்ந்து வருகிறார்.

இந்தச் சேவையில் கலந்து கொள்ளும் மக்கள் தமது பிரச்சினைகள் தொடர்பாக உரிய அதிகாரிகளை நேரில் சந்தித்து அவற்றுக்கான பரிகாரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

கடந்த வருடம் நடைபெற்ற இதேபோன்ற மக்கள் குறை கேள் நிகழ்வில் முன்வைக்கப்பட்ட பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

## நாளை

சித்திரை 29
சனிக்கிழமை
திதி: பஞ்சமி
முன்னிரவு 10.39 வரை.
நட்சத்திரம்: பூராடம்
மு.இ. 7.42 வரை.
சுபநேரம் : 2.54 - 4.24
ராகுகாலம் : 8.54 - 10.24
(பழைய நேரப்படி)

## யாழ்.இந்து பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9.45 மணிக்கு குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கல்வி, உயர்கல்வி அமைச்சின மேலதிக செயலாளர் சி.தில்லைநடராஜா கலந்துகொள்ள இருக்கிறார்.

திருமதி தெ.தில்லைநடராஜா மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கிக் கௌரவிப்பார். (க-4)

## உதயவாக்கு

கேள்விகள் கேட்பவன் ஐந்து நிமிடத்துக்கு முட்டாள். கேட்காதவன் எப்போதுமே முட்டாளாக இருக்கிறான்.

## உளநலம் குன்றியவர்கள் மற்றும்

# செவிப்புலன் பாதிக்கப்பட்டோருக்கு தொழில் முயற்சிக்கான கடன்

யாழ்ப்பாணம்,மே11

உளநலம் குன்றியவர்கள் மற்றும் செவிப்புலன் பாதிக்கப்பட்டவர்களுக்கு வருமானத்தை ஈட்டிக் கொடுக்கும் திட்டங்களுக்கான உதவிகளை அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் வழங்கவுள்ளது.

இத்திட்டத்திற்காக அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் 6 லட்சம் ரூபா வரையில் ஒதுக்கீடு செய்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தெல்லிப்பழை உளநல சங்கம் ஊடாக உளநலம் குன்றியவர்களுக்கும் யாழ்ப்பாணத்திலுள்ள செவிப்புலன் பாதிப்புற்றவர்களுக்கும் தொழில் முயற்சிக்கான கடன்கள் வழங்கப்படவுள்ளன. இவற்றை விட மேலும் சில திட்டங்களை யாழ்.மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் அங்கீகரித்துள்ளது.

அந்தத் திட்டங்களின் விவரம் வருமாறு:-

சலவைத் தொழிலாளர் தரிப்பிடம் திருத்தம், கலாசார மண்டபம் அமைத்தல் - நந்தரோடை, உடுவில்.

தாவடி கிராம அபிவிருத்திச் சங்கம் ஊடாக கடித உறை உற்பத்தித் திட்டம்.

அளவெட்டி குருவளை இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாமில் உள்ளவர்களுக்கு தொழில் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் சுழற்சி முறைக் கடன் திட்டம் - தொழிற் பயிற்சி மண்டபம் திருத்தல். (க-5)

# மாணவ திறன் கண்காட்சி தேசிய மட்டத்தில் நடக்கும்

## கல்வி அமைச்சின் செயலாளர் அறிவிப்பு

வலிகாமம் தெற்கு,மே11

தற்போது செயற்பட்டுக் கொண்டிருக்கும் புதிய கல்விச் சீரமைப்புக்கள் தொடர்பாக தேசிய மட்ட மாணவ திறன் கண்காட்சியொன்றை நடத்த கல்வி அமைச்சு திட்டமிட்டிருப்பதாக கல்வி அமைச்சு செயலாளர் வைத்திய கலாநிதி தாரா டீ மெல் கல்விப்பணிப்பாளர்களூடாக பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

இக்கண்காட்சிக்கு காட்சிப் பொருள்களைச் சமர்ப்பித்து வெற்றி பெறுவோர்களுக்கு கிண்ணங்கள், சான்றிதழ்கள், பரிசுகள் என்பவற்றை வழங்கவும் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

பாடசாலை மட்டத்திலும், வலய மட்டத்திலும் கண்காட்சிகள் நடத்தப்பட்டு, இக்கண்காட்சிக்கான பொருள்கள் தெரிவு செய்யப்படும். பாடசாலைகளில் தரம் 1-5 வரை ஆரம்பப் பிரிவு எனவும் தரம் 6-9 வரை கனிஷ்ட பிரிவு எனவும், தரம் 10-13 வரை சிரேஷ்ட பிரிவு எனவும் மூன்று நிலைகளில் கண்காட்சிகள் இடம்பெறும்.

ஜூன் மாதம் 7 ஆம் திகதிக்கு முன்பாக பாடசாலை மட்ட கண்காட்சிகளை நடத்தி முடிக்குமாறு அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் தெரிவுசெய்யப்பட்ட பொருள்களை வைத்து ஜூன் மாதம் 15, 16, 17 ஆம் திகதிகளில் வலய மட்ட கண்காட்சி இடம்பெறும்.

வலய மட்ட கண்காட்சியில் இருந்து தெரிவுசெய்யப்படும் காட்சிப் பொருள்கள் தேசிய மட்ட கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும். ஆரம்ப, கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவுகளில் இருந்து தலா மூன்று ஆக்கங்களும், மூன்று பிரிவுகளில் இருந்தும் ஆசிரிய ஆக்கங்கள் மூன்று என்பன தேசிய மட்ட கண்காட்சிக்குத் தெரிவு செய்யப்படும்.

தேசிய மட்ட மாணவ திறன் கண்காட்சி ஜூன் 29, 30 ஜூலை 1 ஆம் திகதிகளில் கொழும்பு இசிபத்தான மகாவித்தியாலயத்தில் நடைபெறும். (க-153)

கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!





அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் மூலம் கல்வித் துறைக்கு சிறந்த சேவையாற்றி வரும் அந்தநிறுவனத்தின் தலைவர் அ.நல்லதம்பியின் சேவையைப் பாராட்டி வயாவிளான் மத்திய மகா வித்தியாலய சமூகம் அவருக்கு 'சமூக தீபம்' என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்துள்ளது.
வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் வி.இராசையா, அ.நல்லதம்பிக்கு பட்டத்தை வழங்குவதைப் படத்தில் காணலாம். அருகில் பாடசாலை அதிபர் ஆ.சி.நடராஜா காணப்படுகின்றார்.
(ம-133)




வடமராட்சி லயன்ஸ் கழகத்தினால் அண்மையில் கரவெட்டி கிழக்கு நாமகள் ச.ச.நிலையத்தில் வடமராட்சி லயன்ஸ் கழகத்தினால் கண் பரிசோதனையும் பொது மருத்துவச் சிகிச்சையும் நடத்தப்பட்டது.
பருத்தித்துறை மாவட்ட வைத்தியசாலை பல் வைத்திய நிபுணர் டாக்டர் ரீ.ஜெயராசா சிறுமியொருவருக்கு பற்சிகிச்சை அளிப்பதைப் படத்தில் காணலாம். அருகில் லயன்ஸ் கழகப் பிரமுகர்கள் காணப்படுகின்றனர்.
(ம)

# இந்தியா செல்லும் ஈழ அகதிகளின் எண்ணிக்கை குறைந்துவிட்டது

## கரையோரப் பாதுகாப்புப் பிரிவினர் அறிக்கை

கொழும்பு,மே11

வடபகுதியிலிருந்து இந்தியாவின் தமிழ்நாட்டுப் பகுதிக்குச் செல்லும் இலங்கை அகதிகளின் எண்ணிக்கை இவ்வருடம் ஓரளவு குறைந்துள்ளதாக இந்திய கரையோரப் பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அப்பிரிவினரால் வெளியிடப்பட்டுள்ள வருடாந்த அறிக்கை மூலம் இத்தகவல் அறிவிக்கப்படுகிறது. அந்த அறிக்கையின் படி கடந்த வருடம் மொத்தம் 1570 இலங்கை அகதிகள் இந்தியாவுக்குச் சென்றிருக்கிறார்கள். ஆனாலும் கடந்த நான்கு மாதங்களில் 89 பேர் மட்டுமே அகதிகளாகச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய கரையோரப் பாதுகாப்புப் பிரிவினரும் இலங்கை கடற்படையினரும் கூட்டாக மேற்கொண்ட விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் காரணமாகவே இலங்கை அகதிகள் இந்தியாவுக்குச் செல்வது குறைந்துள்ளதாகவும் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 15 - 06 - 1932

உதிர்வு 11 - 04 - 2001

அமரர்
**நீக்லஸ் ஆசீர்வாதம்**

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக இன்று (11.05.2001) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியிலும் அவரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.* (87638)

மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

# வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உள்ள 464 விகாரைகளை பராமரிக்கும் பொறுப்பை டக்ளஸிடம் வழங்குங்கள்!

## அரச தரப்பு எம்.பிக்கள் கோரிக்கை

கொழும்பு,மே11

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் அமைந்துள்ளதாக மதிப்பிடப்படும் 464 பௌத்த வணக்க ஸ்தலங்களையும் வரலாற்றுச் சான்றுகளையும் புனரமைப்புச் செய்து அவற்றைப் பராமரிக்கும் பொறுப்பை வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் ஒப்படையுங்கள். ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கலாசார அமைச்சரிடம் இவ்வாறு கேட்டிருப்பதாக சிங்களப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டிருக்கிறது.

இந்தப் பிரதேசத்தில் உள்ள பௌத்த விகாரைகள் அழிவுறும் நிலையில் உள்ளன. எனவே அவற்றின் புனரமைப்புப் பணிகளை உடனடியாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் எம்.பிக்கள் கேட்டிருக்கின்றனர்.

ஆர்.எம்.ரத்னாயக்க, கயந்த கருணதிலக, சுரனிமல ராஜபக்ஷ, லக்கி ஜெயவர்த்தன, ஆகியோர் அடங்கிய எம்.பிக்கள் குழுவே ஜனாதிபதியிடம் இந்தக் கோரிக்கையை விடுத்திருக்கிறது.
(ஜ-20)

## முத்திரைகளுக்குத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம்,மே11

யாழ்ப்பாணத்தில் முத்திரைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக பிரமத தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

2ரூபா, 5ரூபா, 10ரூபா, 20ரூபா பெறுமதியுள்ள முத்திரைகளுக்கே தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கடந்த மாத இறுதிப் பகுதியில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக முத்திரைகள் எடுத்து வருவதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது என்றும் - ஓரிரு தினங்களில் முத்திரைகள் எடுத்துவரப்பட்டவுடன் இத்தற்காலிக தட்டுப்பாட்டு நிலைமை நீங்கிவிடும் என்றும் பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளை நேற்று காங்கேசன் துறையை வந்தடைந்த செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் கப்பலில் 187 தபாற் பொதிகள் எடுத்துவரப்பட்டுள்ளதாகவும் 34 தபாற் பொதிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (க-9)

## வர்த்தக டிப்ளோமா இறுதிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,மே11

யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவன உயர் தேசிய வர்த்தக டிப்ளோமா இறுதி வருட மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சைகள் எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பமாகி ஜூன் மாதம் முதலாம் திகதி வரை நடைபெறும்.

இந்தப் பரீட்சை தொடர்பான அறிவுறுத்தல்களை பரீட்சை ஆணையாளர் யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவன இயக்குநர் ரி.ராஜரட்ணத்துக்கு அனுப்பி வைத்துள்ளார்.
(க-6)

## அமைச்சருடனான மக்கள் சந்திப்புத் திகதிகளில் மாற்றம்

யாழ்ப்பாணம்,மே11

எதிர்வரும் 17ம், 18ம் திகதிகளில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடனான பொதுமக்கள் மற்றும் பொதுநிறுவனப் பிரதிநிதிகள் சந்திப்பு இடம்பெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 17ம், 18ம் திகதிகளில் நடைபெறவுள்ள யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் மற்றும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஆகியவற்றில் டக்ளஸ் கலந்து கொள்ளவுள்ளதால் இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பொது மக்கள் மற்றும் பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள் அமைச்சருடனான சந்திப்பை 21ம் திகதி முதல் வழமைபோல் மேற்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்மாவட்டத்தில் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காணு முகமாக எதிர்வரும் 19ம் திகதி நடைபெறவுள்ள குறை நிவிர்த்தி சேவையில் இணைந்து பொது மக்களும் பொது நிறுவனங்களும் தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மக்கள் குறை நிவர்த்த சேவையில் மத்திய, மாகாண அரசுகளின் கீழ் இயங்கும் அரச திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள், செயலாளர்கள், மற்றும் உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (க)

# 49ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

தோற்றம் 11 - 02 - 1963



மறைவு 24 - 03 - 2001

**24.03.2001 செல்வச் சந்நிதியில் சங்கமமான**
எங்கள் குடும்ப விளக்கான
அமரர்
**இராமுப்பிள்ளை பாலசுப்பிரமணியம்**

எங்கள் குடும்ப விளக்கு அணைந்த வேளையில் எமது இல்லம் நாடி ஓடோடி வந்து எமக்கு அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும் உதவிகள் செய்த உறவினர், அயலவர்களுக்கும், பத்திரிகை மூலமும் கனடாவிலும் மற்றும் நாடுகளில் இருந்தும் தொலைபேசி மூலமும் கடிதங்கள் மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் எமது துயரத்தில் பங்குகொண்ட அனைவருக்கும் நாம் நன்றிகள் தெரிவிப்பதுடன்

இன்று (11.05.2001) வெள்ளிக்கிழமை நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், வீட்டுக்கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் கலந்துகொண்டு அமரர் சந்நிதி முருகனிடம் சாந்தி அடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*வன்னியசிங்கம் வீதி,*
*தாவடி வடக்கு,*
*கொக்குவில்.* (87645)

மனைவி, பிள்ளைகள்,
இராமுப்பிள்ளை (தகப்பன்)

# WANTED

AN INSTRUCTOR FOR TEACHING ACCOUNTING IN ENGLISH MEDIUM FOR NON- FORMAL STUDENTS.

*APPLY:- ON OR BEFORE 18th OF MAY, 2001.*

*PRINCIPAL,*
J/METHODIST GIRL'S HIGH SCHOOL
POINTPEDRO.
(c/16656)

மறுமலர்ச்சி எழுத்தாளர், வித்வசிரோமணி
**பண்டிதர் பிரம்மஸ்ரீ ச.பஞ்சாட்சர சர்மாவின்**

# நூல் அறிமுகவிழா

*இடம்* : கோப்பாய் - வடக்கு, கந்தசாமி கோயில் மண்டபம்
*காலம்* : 13.05.2001 ஞாயிறு பி.ப.2.00 மணி

*தலைமை* : பிரம்மஸ்ரீ சி.சிவசரவணபவன் (சிற்பி)
*சிறப்பு விருந்தினர்* : திரு.சி.கேதீஸ்வரன்
*(பிரதேச செயலர், கோப்பாய்)*

*அறிமுகம் செய்யப்படும் நூல்கள்*

*அக்ஷரபோதினி:* சமஸ்கிருத பாலபாடம் (கிரந்தம், தேவநாகரி) ரூ.150/-
மறுமலர்ச்சி கண்ட மாணிக்கம் - ச.ப.சர்மா பற்றிய ஆய்வுநூல் - ரூ50/--

*நிகழ்ச்சிகள்*

*வேதபாராயணம்* - சமஸ்கிருத பண்டிதர் கி.சதாசிவ சர்மா
*தேவாரம்* - திரு.சி.சத்தியலிங்கம்
*ஆசியுரை* - சித்தாந்தபாநு சோ.சுப்பிரமணியக் குருக்கள்
*தொடக்கவுரை* - திரு.த.தர்மராஜா *(ஆலய தர்ம பரிபாலன சபைத் தலைவர்)*
*அறிமுகவுரை* - திரு.க.இ.குமாரசாமி J.P. *(ஓய்வு பெற்ற அதிபர்)*
பாராட்டுரைகள் - திரு.வே.சந்திரசேகரம்பிள்ளை *(ஓய்வு பெற்ற அதிபர்)*
திரு.செ.விஸ்வலிங்கம் *(சேவைக்கால ஆலோசகர்)*
*நயப்புரை* - ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம் அவர்கள்
*வெளியீட்டுரை* - பிரம்மஸ்ரீ க.இலட்சுமண சர்மா *(இலங்கை வங்கி, மானிப்பாய்)*
*பதிலுரை* - செல்வி செல்வராணி வேலுப்பிள்ளை B.A.(HONS)
*நன்றியுரை* - பிரம்மஸ்ரீ V.சிவானந்த சர்மா B.A. (HONS) *(கோப்பாய் - சிவம்)*

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*
(தனிப்பட்ட அழைப்பு இல்லை)

*கோப்பாய்.* (87642) -ச.ப.சர்மா குடும்பத்தினர்.

# விவசாயிகளே! 'போடோ கலவை' சிறந்த பங்கசு நாசனி!

விவசாயிகளின் அதீத பிரச்சினையாக விளங்கும் நோய் மற்றும் பூச்சி பீடைகளைக் கட்டுப்படுத்த பீடை நாசனிகளிலேயே அதிகளவு பணத்தை விரயமாக்க வேண்டியுள்ளது. அதிலும் காலாவதியாகாத பீடை நாசனிகளைப் பெற்றுக்கொள்வதும் இலகுவானதல்ல. பீடைநாசனி கொள்கலன்களிலுள்ள காலாவதியாகும் திகதியை கணனி தொழில்நுட்பத்தின் மூலம் இலகுவாக மாற்றியமைக்கும் புத்திசாலிகளுக்கு மத்தியில் போரீடா கலவை (Bordeaux Mixture) என்னும் இயற்கையாக கிடைக்கக்கூடிய மூலப்பொருள்களிலிருந்து விவசாயிகளினால் இலகுவாகத் தயாரிக்கக்கூடிய பங்கசு நாசனியை அதிகமான விவசாயிகள் பயன்படுத்துவதேயில்லை.

'போடோ கலவை' என்பது ஒரு பங்கசு நாசினியாகும். இதற்கு மூலப்பொருள்களாக பல்மாணிக்கம் அல்லது துருசு என சாதாரணமாக அழைக்கப்படும் செப்புசல்பேற்றும் சுண்ணாம்பு என அழைக்கப்படும் கல்சியம் காபனேற்றும் பயன்படுத்தப்படுகின்றது. இம்மூலப் பொருள்களை மிகச் சாதாரணமாக வர்த்தகக் கடைகளில் குறைந்த விலையில் இலகுவாகப் பெற்றுக்கொள்ளமுடியும். இக்கலவையானது பயிர்களில் தோன்றும் பூஞ்சண நோய்களைக் கட்டுப்படுத்தப் பயன்படுகின்றது.

அவையாவன:-

புகையிலையில் கறுப்பு இலைத்தண்டு நோய் (Black shank), திராட்சையில் வெண்துகள் நோய (Powdery mildew), உருளைக் கிழங்கில் பின் வெளிறல் நோய் (Late blight), தேசி, தோடையில் பிசின் வடிதல் (Gummosis), தென்னையில் குருத்தழுகல் (Bud rot), வெற்றிலை இலை அழுகல் (Leaf rot) என்பவற்றைப் படுத்த பயன்படுகின்றது.

இக்கலவையானது பூஞ்சணங்களின் வித்தி உருவாக்கம், வித்தி முளைத்தல் என்பவற்றையும் நிரோதிக்கின்றது.

### போடோ கலவை தயாரிக்கும் முறை

ஒரு கிலோ துருசை (செப்பு சல்பேற்று) இடித்துத் தூளாக்கி நான்கு லீற்றர் நீரில் கரைத்து ஒரு பாத்திரத்தில் எடுக்கவும். அதே போல் ஒரு கிலோ சுண்ணாம்பை (கல்சியம் காபனேற்று) இடித்து தூளாக்கி நான்கு லீற்றர் நீரில் கரைத்து இரண்டாவது பாத்திரத்தில் எடுக்கவும். மூன்றாவது பாத்திரத்தில் சுண்ணாம்புக் கரைசலை ஊற்றி அதனுள் துருசுக் கரைசலை மெதுவாக ஊற்றிக் கலக்கவும். பின்பு அதனுள் மீதமான ஐந்து லீற்றர் நீரை ஊற்றி நன்கு கலக்குக. (1கிலோ:1கிலோ:13லீற்றர்) (4கிலோ:4கிலோ:50லீற்றர்) இப்போது போடோக் கலவை தயாராகிவிட்டது. இந்த இறுதிக் கலவை தயாரிக்கும் பாத்திரம் துருசுவுடன் தாக்கமடையக்கூடாது. இதற்காகப் பிளாஸ்ரிக், மண் பாத்திரங்கள் பயன்படுத்தலாம்.

இந்த இறுதிக் கலவையில் சுயாதீன செப்பு மூலக்கூறுகள் காணப்படக் கூடாது.

G. ...வின் குறாஸ்
4ஆம் வருட மாணவன்
விவசாய உயிரியல் துறை,
விவசாய பீடம்.

இது தாவரங்களில் நச்சுத் தன்மையை ஏற்படுத்தலாம். இதனைச் சுலபமாகக் கண்டுபிடிப்பதற்குத் தூய இரும்புத் தகடு, இரும்புக் கத்தி அல்லது பிளேற்று ஒன்றை இறுதிக் கரைசலில் நனைக்கும் போது கரைசல் பட்ட இடத்தில் துரு தோன்றும். துரு தோன்றாதவாறு கலவை தயாரித்தல் வேண்டும்.

இக்கலவையை தேவைக்கேற்ற அளவில் தயாரித்து உடனடியாக பயன்படுத்தினால் சிறந்த பூஞ்சண கட்டுப்பாட்டைப் பெறலாம். வெட்டுத்துண்டங்கள் மற்றும் கத்தரித்தலுக்குப் பின் வெட்டப்பட்ட தாவர பாகத்தை இக்கலவை கொண்டு பூசுவதால் பங்கசு தாக்கத்தைத் தவிர்க்கலாம். நீங்களும் தயாரித்து விசிறிப் பாருங்களேன் பலனை எமக்கு எழுதுங்கள்.

'அநாவசியமான தேவையற்ற பீடை நாசினிப் பிரயோகம் சூழலை மாசுபடுத்தும்'

## கமமும் புலமும்

தயாரிப்பு: ஜெயாறீ

# கத்தரி, வெண்டி பயிர்களில் பச்சை நிற இலைத் தத்திகள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் கத்தரி, வெண்டி பயிர்களில் பச்சை நிற இலைத்தத்திகளின் பெருக்கம் அதிகரித்து பயிர்களைத் தாக்கி சேதம் விளைவிப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

இத்தத்திகள் இலைகளின் கீழ்ப் புறத்தில் அதிகளவில் காணப்படும். இதத்திகள் மிகச் சிறியவை. இளம் பருவமும், முதிர் பருவமும் தாக்கத்தை ஏற்படுத்தும். இளம்பருவம் பழுப்பு வெள்ளை நிறமாகவும், முதிர் பருவம் பசுசை நிறமாகவும் இருக்கும்.

### தடுப்பதற்கு இலகு வழிகள்

இவையோ இலைகளில் இருந்து சாற்றை உறிஞ்சுவதனால் இலை ஓரங்கள் மஞ்சள் நிறம டைந்து கருகும். இதனைக் கட்டுப்படுத்தாவிடின் தாவரத்தின் வளர்ச்சி குன்றி விளைவும் குறையும்.

**கட்டுப்பாட்டு முறைகள்:**

*1. உள்ளிப்பாவனை:*

100 கிராம் உள்ளியை அரைத்து, 10 கிராம சவர்க்காரம், 2 தேக்கரண்டி மண்ணெய், 1/2 லீற்றர் நீர் ஆகிய வற்றுடன் சேர்த்து கூழாக்கி 24 மணி நேரம் ஊறவைக்கவும். பின்னர் வடித்து அத்திரவத்தை 20 லீற்றர் நீருடன் கலந்து ஐதாக்கி விசிறவும்.

*2. வேப்பமிலைப் பாவனை:*

2கிலோ வேப்பமிலையை 5 லீற்றர் நீரில் இட்டு இலைகள் பொன்னி நேரம் குளிரவிட்டு, வடித்து சிறிது சவர்க்காரக் கரைசலுடன் கலந்து விசிறவும்.

*3. வேப்பம் விதைப் பாவனை:*

20-35 கிராம் விதையை இடித்து மாவாக்கி 1 லீற்றர் நீரில் இட்டு 12 மணிநேரம் ஊறவிட்டு, வடித்து சிறி தளவு சவர்க்காரக் கரைசலுடன் கலந்து விசிறவும்.

*4. மாட்டுச்சலப் பாவனை:*

ஒரு பாத்திரத்தில் மாட்டுச் சலத்தைச் சேகரித்து இரண்டு வாரங்கள் மூடி வைத்திருக்கவும் பின்பு இரண்டு பங்கு நீருடன் கலந்து விசிறவும்.

*குறிப்பு:*

1. மேற்படி இயற்கை நாசனிகளை; தாவர இலைகளின் கீழ்ப் புறமும், மேல் புறமும் நன்கு நனையும்படி விசிறவும் இந்நாசனிகளை கிழமைக்கு ஒருமுறை மாற்றி மாற்றி தொடர்ந்து விசிறுவதனால் இப்பூச்சிகளின் தாக்கத்தைக் குறைக்க முடியும்.

S. சின்னத்துரை
உதவி விவசாயப்
பணிப்பாளர் (விரி.)
யாழ். மாவட்டம்.

2. மேலதிக விபரங்களுக்குத் தங்கள் பிரிவு விவசாயப் போதனாசிரியர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு விவசாயிகள் வேண்டிக்கொள்ளப்படுகின்றனர். ★

# ஐந்து வருடங்கள் பராமரித்தால் வளத்தை அள்ளித் தரும் தென்னை

**'தென்னை, பனை, கமுகுச் செய்கை இவ்வாண்டு செழிப்புப் பெற வாய்ப்பு' என்ற தலைப்பில் கடந்த 05.05.2001 உதயனில் 'கமமும் புலமும்' பகுதியில் வெளியான கட்டுரையின் இரண்டாவது பகுதி இங்கே பிரசுரமாகின்றது.**

**தென்னைச் செய்கை முறைகளை விளக்குகிறது இக்கட்டுரை**

### "நீர்பாய்ச்சுதல் அல்லது நீர் இறைப்பு"

குடாநாட்டில் நீர் பெறுவதற்கு பல வழிகள் உண்டு. தூரவுகள், கிணறுகள், குழாய்க்கிணறுகள், சிறு நீர்த்தேக்கங்கள் இவற்றிலிருந்து கிடைக்கும் நீரை வினைத்திறனாகப் பயன்படுத்தவேண்டும். கூடுதலான உவர்ப்பான நீர் செழிப்பான வளர்ச்சியைத் தடை செய்யும். அதாவது மண்ணில் PH.8 பெறுமானத்துக்குக் கூடினால் தென்னைக்கான நுண்ணூட்டச் சத்துக்கள் கிடைப்பது தடை ஏற்படும். ஓரளவுக்கு நல்ல நீரைப் பயன்படுத்துதல் சிறப்பாகும்.

தென்னங்கன்று நட்டபின் 3 நாள்களுக்கு ஒருதடவை 10 லீற்றர் நீர் ஒரு தென்னங்கன்றுக்கு கிடைக்கச் செய்ய வேண்டும். மேற்கொண்டு 2-3 வருடங்களாயின் 20 லீற்றர் நீர் கிழமைக்கு ஒரு தடவை கொடுக்கப் படவேண்டும். பெரிய மரங்களாயின் 50 தொடக்கம் 150 லீற்றர் நீர் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

விரைவான வளர்ச்சிக்கும் 4 1/2 -5 வருடங்களில் காய்கள் பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் செயற்பட நாம் ஒரு மாதத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட குருத்து வரச் செய்ய வேண்டும். மேலும் கன்று நட்டு 2 வருடத்தில் சிறப்பான முறையில் வளர்த்தெடுத்தால் 5 வருடங்களில் நாம் காய்களைப் பெற முடியும் அதில் அனுபவப்பட்ட விவசாயிகள் பலர் உள்ளனர். ஏனெனில் ஒருதேங்காயை நாம் குறித்தே வைக்கு உடைக்கும் போது அதனுடைய வயது 39-49 மாதங்கள். எனவே தென்று நட்டு 2 ஆம் வருடத்தில் கன்றின் செழிப்பான வளர்ச்சியைக்கொண்டு 4 1/2 -5 ஆம் வருடத்தில் காய் தரும் என்று நிச்சயமாக நம்பமுடியும்.

மேலும் 3 வருடங்களில் காய்க்கும் கன்றுகள் பல இடங்களிலும் கமநலசேவை நிலையத்தினரால் வழங்கப்பட்டுள்ளன. உண்மையில் இந்தக் கன்றுகள் நட்டு 9 மாதங்களில் 'வட்டு பெயரச் செய்யத்தக்க வகையில் பராமரித்தால் நிச்சயமாக 3ஆம் வருடத்தில் பூக்களைக் காணலாம்.

இதற்கு நாம் செய்யவேண்டியது முறையாக நீர் பாய்ச்சவேண்டும், அளவான உரப்பசளை, சேதனப் பசளை பாவிக்கவேண்டும். அடுத்ததாக பூச்சி, புழுத் தாக்கங்களைக் கட்டுப்படுத்தவேண்டும். பூச்சி, புழு கட்டுப்பாட்டுக்கு நாம் என்ன செய்யலாம் எனபார்ப்போம்.

பூச்சி, புழுத் தாக்கம் :- (சகல பீடைகளுக்கும்)

நமது வீடுகளில் எப்போதும் 'பனடோல்' என்ற பொது உடல் அசதி நிவாரணி மாத்திரை இருப்பது போல, காபோ பியூரான் என்ற பியூறடான் என்னும் நாவல், செந்நிறம் கொண்ட குறுணல் மருந்து அவசியம் தென்னை வளர்ப்பாளர்களிடம் இருக்கவேண்டும். ஏனெனில் இதைக் கையாள்வது சுலபம். இது தனியே தென்னைக்கு மட்டுமல்ல வீட்டில் காணப்படும் பூமரங்கள் போன்றவற்றைத் தாக்கும் எல்லா பீடைகளுக்கும் பயன்படத்தக்க தொன்று.

இந்தக் குறுணல்களைக் கையுறை அணிந்த கைகளால் அல்லது ஒரு சிறிய கரண்டியினால் சிறிதளவை குருத்தினுள் தூவி சிறிதளவு நீரால் நனைத்துவிடலாம். அல்லது அடியில் சிறிதளவு மண்ணை வட்டமாக எடுத்த பின் குருணலைத் தூவி மண்ணால் மூடி நீர் ஊற்றி விடலாம்.

பெரிய மரமாயின் குருத்தினுள் மட்டை இடுக்குகளில் குறுணலைத் தூவி விடலாம். சிறிது நீரால் அவற்றை நனைத்து விடலாம்.

அல்லாவிடில் திடமான வேர் ஒன்றை 5 - 6 அடி தூரத்தில் தோண்டி எடுத்து அதை பியூறடான் குறுணல் 50கிராம் பொலித்தீன் பை, அல்லது சொப்பிங் பை 2ஐ ஒன்றினுள் ஒன்றை வைத்து அதனுள் 1-அரை லீற்றர் நீரை ஊற்றி வேரை அதனுள் வைத்து மண்ணுள் வைத்து மூடி விடலாம் அல்லது பன்ரா, ஸ்பிரைற் பிளாஸ்ரிக் போத்தல் 1 1/2 லீற்றர் அளவுள்ளது அதனுள் 50 கிராம் குறுணலை எடுத்து நீர்விட்டு குலுக்கிய பின் நல்ல நிலையில் உள்ள வேரை அதனுள் புகுத்தி அதன் மூலமும் நாம் உயரமான மரத்துக்கு பூச்சி பீடைகளைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தலாம். இது அகத்துறுஞ்சும் நாசனியாகும்.

இப்படியாக சிறந்த செய்கை முறைகளைச் செய்யும்போது தென்னங்கன்று சிறப்பாக வளர்ந்து 4 1/2 - 5 வருடங்களில் நிச்சயமாகப் பயன்தரும்.

அதாவது ஒரு பிறந்த குழந்தைக்கு 5 வருடம் கொடுக்கின்ற சிறப்பான அத்தியாவசியமான சிகிச்சை முறைகள் அதன் 18 வயதின் பின்னர்தான் நாம் பயனைப் பெறமுடியும்.

ஆனால் நாம் ஒரு தென்னங் கன்றை நட்டு 5 வருடம் பராமரித்தால் தற்போதைய நிலையில் 100 - 150 காய்கள் தருமானால் அதன் பெறுமதி 2000 - 3000 ரூபா வருடம் ஒன்றுக்கு தரும். அதன் 75 வருட சீவிய காலத்தில் அது எமக்குத் தரும் வருமானம் ஏறக்குறைய 1 - 1 1/2 இலட்சம் ரூபா. இது தேங்காயில் இருந்து கிடைக்கும் வருமானம் மட்டுமாகும். எனவே தன்னுடைய பிள்ளை நன்கு கடமை செய்யாவிட்டாலும் அந்த குழந்தை பிறந்த நோக்கில் நட்ட தென்னம்பிள்ளை பயனைத் தந்து காப்பாற்றும்.

எனவே தென்னையை நாட்டி பயன் பெறுவோம்.



### சேதன அசேதன பசளை அளவு - தென்னைக்கானது
### கிலோ அளவு / 1 கன்று / 6 மாதங்கள்

| வயது மாதங்களில் | மாட்டெரு(உலர்) கிலோ | | ஆட்டெரு கிலோ | | கோழி எரு கிலோ | | கூட்டெரு கிலோ | | மியூறியேற் ஒப் பொட்டாஸ் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | புதிய நடுகை | கீழ் நடுகை | புதிய நடுகை | கீழ் நடுகை | புதிய நடுகை | கீழ் நடுகை | புதிய நடுகை | கீழ் நடுகை | |
| நடுகைக் குழியில் | — | 11 | — | 7 | — | 9 | | 18 | — |
| 6-11 மாதங்கள் | 3 | 9 | 2 | 5 | 3 | 7 | 4 | 13 | — |
| 18-30 மாதங்கள் | 5 | 9 | 4 | 5 | 5 | 7 | 8 | 13 | — |
| 30-42 மாதங்கள் | 9 | 11 | 5 | 7 | 7 | 9 | 13 | 17 | — |
| 42-54 மாதங்கள் | 11 | 13 | 7 | 8 | 9 | 11 | 17 | 21 | — |
| 54 மாதங்கள்- பூத்தல் | 13 | 16 | 8 | 9 | 11 | 12 | 21 | 25 | — |
| காய்க்கும் மரங்கள் இருவாட்டி மண்ணுக்கு | 30 கிலோ | | 15 கிலோ | | 15 கிலோ | | 30 கிலோ | | 1 கிலோ |
| மணல் மண்ணுக்கு | 35 கிலோ | | 18 கிலோ | | 20 கிலோ | | 40 கிலோ | | 1 கிலோ |

க. தனிநாயகம்
தென்னை அபிவிருத்தி
உத்தியோகத்தர், தென்னை
முகாமைத்துவப் பகுதி பளை

## போருட் - யாழ்ப்பாணம்
## FORUT - JAFFNA

எம்மிடம் கீழ்க்காணும் பொருள்கள் விற்பனைக்கு உண்டு.

1. அரியாலை மணல் 08 டிரக்டர் லோட்.
2. சீவிய பனம் குற்றிகள் 10 அடி, 06 அடி நீளம்.

கேள்விப்பத்திரங்களை மீளளிப்புத் தொகையான ரூபா 200/= செலுத்தி வேலை நாள்களில் கீழ்க்காணும் முகவரியில் பெற்றுக்கொள்ளவும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களை 18.05.2001 (வெள்ளிக்கிழமை) பி.ப. 3 மணிக்கு முன்னதாக காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

கேள்விப்பத்திரங்கள் அதே தினம் பி.ப. 3.30 மணிக்குத் திறக்கப்படும்.

சமர்ப்பிக்கப்படும் கேள்வி எமது எதிர்பார்ப்பிற்கு அமையாவிட்டால் கேள்விப்பத்திரங்கள் அனைத்தையும் நிராகரிக்க எமது ஸ்தாபனத்திற்கு உரிமையுண்டு.

திட்ட முகாமையாளர்
(Programme Manager)
67, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (87633)

## 16ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியை அழைப்பும்

தாயின் மடியில் 12 - 12 - 1927



அம்பாள் அடியில் 26 - 04 - 2001

### திருமதி நாகரெத்தினம் செல்வமணியம்

திடீரென்று எம்மைப் பிரிந்து சென்றுவிட்டீரே!
ஆத்மா சாந்தியடையட்டும்!

எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (11.05.2001) வெள்ளிக்கிழமை வில்லூன்றித் தீர்த்தக் கேணியில் இடம்பெறும். நாளை மறுதினம் (13.05.2001) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*122/5, ஆனைப்பந்தி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.* (87620) - குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 10 - 05 - 1934



மறைவு 12 - 04 - 2001

### அமரர் கதிரன் கணபதி

அன்பின் பிறப்பிடமே!
பண்பின் உறைவிடமே!
உம்மை எப்படி நாம் மறப்போம்?

எமது அன்புத் தந்தையார் அமரத்துவம் அடைந்த செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிய அயலவர், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், இறுதிச்சடங்கில் கலந்து எமக்கு ஆறுதல் கூறியவர்கள் மற்றும் பல வழிகளிலும் உதவியவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை (12.05.2001) சனிக்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்.

*ஜனசக்தி ச.ச.நி. வீதி, சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.* (87591)

பிரிவால் துயருறும்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# இல்லறம் சிறக்கவும் இறைபதம் எய்தவும் அன்பெனும் செல்வம் அரும் துணையாகும்!

**ஞானக்கதிர்**

"அன்பென்று கொட்டு முரசே மக்கள் அத்தனை பேரும் நிகராம்" எனப் பாடிய பாரதியாரின் பாடலுக்கமைய நாம் வாழ வேண்டுமெனில் எம்மை இணைந்து வாழச் செய்யும் சக்தி அன்புக்கே உண்டு. ஒருவர் மனதை ஒருவர் புரிந்துகொண்டு இனிய வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவும் அன்பே முக்கியம். ஏன்? கடவுளிடம் பக்தி செலுத்த வயதும், உருவமும் குறுக்கிடாது. கல்வி செல்வம், ஜாதி, பலம் முக்கியமல்ல. நல்ல ஆசாரம் நற்குணம் இவற்றிலும் இறைவன் அவ்வளவாகக் கவனம் செலுத்துவதில்லை. அவர் அன்பு ஒன்றையே எதிர்பார்க்கிறார்.

### அன்பின் பெருமை

அன்பு என்ற சொல்லைக் கேட்டவுடனே யாருடைய உள்ளத்தில்தான ஒரு புதுமலர்ச்சி ஏற்படாது. ஒருவன் தனது ஆகக்கூடிய உணர்ச்சி நிலையை விளக்கக்கூடிய சொல் அன்பு என்பதாகும். அன்பு என்ற சொல்லைக் கேட்டதும் ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரியச் செய்கிறது உள்ளம். இது அன்பின் உணர்ச்சி. ஒருவன் அன்பை உணர்ந்து விட்டால் எல்லாம் உணர்ந்தவனாகின்றான். அன்பின் பெருக்கு அதிகமாக ஆக சொற்கள் வாயடைத்துப் போகின்றன. அன்பின் வேகத்தைச் சொற்கள் தடை செய்கின்றன வாய்மூடி மௌனியான உடனே அன்பின் உணர்ச்சி கண்ணீர் மூலம் வெளிவருகின்றது. அன்பு ஆனந்தக் கண்ணீராக மாறுகின்றது.

"அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாள் ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும்" என்பது வள்ளுவர் வாக்கு.

ஒவ்வொரு மனிதனும் பூரணமானவனாக பொலிவுற்று அமைவுபெற அன்பு ஒழுக்கம் கருணை, பண்பு, இன்சொல் என்பவைகள் அவனது வாழ்க்கையில் நிறைந்திருக்க வேண்டும். "அன்பகத்தில்லா உயிர் வாழ்க்கை வன் பாற்கண் வற்றல் மரந்தளிர்த்தற்று" என்று கூறியுள்ளார் வள்ளுவர்.

### அன்பின் வளர்ச்சி

அன்புக்குச் சாதியில்லை, மதம் இல்லை, எதுவித வித்தியாசமும் இல்லை. அன்பு அன்பே தான். அன்பிற்கு உவமை அன்பே தான். இத்தகைய அன்பு வாழ்வில் மலர வேண்டும். வாழ்வோடு இரண்டறக் கலக்க வேண்டும். அப்போது தான் தீமைகள் அகலும். பிரம்மச்சாரி ஒருவன் மணமான உடனே அவனுடைய அன்பு மனைவியிடம் பரவுகிறது. குழந்தை பிறந்த உடனே இருவரது அன்பும் குழந்தையிடம் விரிகிறது. பல குழந்தைகளுக்கு தந்தையும் தாயும் ஆனவர்கள் அவ்வீதியில் உள்ள குழந்தைகளை தம் குழந்தை போலவே அன்புடன் போற்றுகின்றனர். வீட்டுக்குள்ளே இருந்த அன்பு விரிந்து தெருவுக்கு வருகிறது. அது விரிந்து ஊருக்கு வருகிறது. அது விரிந்து தேசத்துக்கு வருகிறது. அது விரிந்து உலகிற்கு வருகிறது. தனக்குள்ளே உள்ள அன்பு விரியும் போது உலகமாகப் பரிணமிக்கிறது. அந்த இடத்தில் அன்பும் சிவமும் ஒன்றெனவே தெரிகிறது.

சமூகஜோதி
**கா. கணேசதாசன்.**

அன்பினால், அகிம்சையினால், பிரார்த்தனையினால் சாதிக்க முடியாதது இவ்வுலகில் ஒன்றும் இல்லை. ஆதலால் யாரேனும் எதிர்த்தால் அவரை அன்பால் வெல்ல வேண்டும். உலகை அன்பு விழிகளால் பார்த்தால் உயிர்களை சிவமயமாகக் கருதினால் எவ்வுயிருக்கும் இன்னலின்றி இரக்கம் கொண்டு வாழ்ந்தால் உண்மையன்பு உள்ளத்திலே இருந்தால் எதிர்ப்பவர் ஒருவர் கூட இல்லாமல் செய்துவிடலாம். அன்பின் மூலம் உலகை ஆட்கொள்ளலாம். எல்லாம் சிவமயம் அன்பே சிவம். ▲

# இறைதொண்டிற்கு 25 ஆண்டுகளை அர்ப்பணித்தவர் வண.விக்ரர் பசில்



இன்று இவரை தாங்கும் பூமி பூரிக்க, பிறந்த மண் மகிழ, பெற்ற அருள் பாரிலே பரவ - குருத்துவ வாழ்வில் இருபத்தைந்து ஆண்டுகள் வாழ்ந்து வெள்ளிவிழாக்காணும் அருட்தந்தையை வாழ்த்துகிறோம். குருத்துவக் கொடையை கொடுத்த இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம். மேதை பிறக்கும் போதே ஒரு மென்மையான உள்ளத்தோடு பிறந்தார். காணாததைக் கண்டு, தன்னை அர்ப்பணித்தார். இன்றுவரை அதை புனிதத்தோடு வாழ்ந்து வருகின்றார்.

இவர் வஸ்தியாம்பிள்ளை சந்தியாப்பிள்ளை - சந்தியாப்பிள்ளை இராசம்மா என்பவர்களின் மூன்றாவது மகனாக 8-1-1952 அன்று கரவெட்டி மண்ணிலே பிறந்து வளர்ந்தவர். இவர் தனது கல்வியை கரவெட்டி திருஇருதயக்கல்லூரி, அனுராதபுரம் புனித சூசையப்பர் கல்லூரி, யாழ்.புனித சம்பத்திரிசியார் கல்லூரி என்பவற்றில் கற்றுத் தேர்ந்தார். தனது குருத்துவப் பயிற்சிகளை யாழ்.புனித மடுத்தினார் சிறிய குருமடத்திலும் மதுரை திருஇருதயப் பெரிய குருத்துவக் கல்லூரியிலும் மேற்கொண்டார். முன்னாள் யாழ். ஆயர் அதிவண.வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களால் 11.05.1976 அன்று குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

அருட்சகோதரன்
**பத்திநாதன்**

இன்று வெள்ளிவிழாக்காணும் அருட்தந்தை அவர்கள் யாழ்ப்பாணம், மன்னார் மறை மாவட்டங்களில் பல இடங்களில் இறைபணி புரிந்தார். புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரியின் பகுதிநேர விரிவுரையாளராகக் கடமை புரிந்தார். 1994ஆம் ஆண்டு உரோமாபுரி சென்று 1996ஆம் ஆண்டு திருச்சபை வரலாற்றுத் துறையில் கலாநிதிப் பட்டம்பெற்றுத் தாய் நாடு திரும்பினார். அன்று முதல் இன்று வரை புனித பிரான்சிஸ்கு சவேரியார் பெரியகுரு மடத்தில் உருவாக்குநராகவும், முழுநேர விரிவுரையாளராகவும், 1998ஆம் ஆண்டு முதல் இக் குருமடத்தின் உப அதிபராகவும் அரும்பணி ஆற்றி வருகின்றார். அத்தோடு யாழ்.மறை மாவட்ட ஆவணக் காப்பகப் பொறுப்பாளராகக் கடமை புரிகின்றார்.

சாதாரணமாக, இன்று மனிதன் தனது வாழ்வை நெறிப்படுத்துவதில் பல சிக்கல்களை எதிர்கொள்கின்றான். இந்நிலையில் அர்ப்பண வாழ்விற்கு அர்த்தம் கொடுப்பது இலகுவானது அல்ல. அமைதியான ஆனால் ஆனந்தமுடன் இக்குருவானவர் தன் அர்ப்பணத்தில் உறுதியாக நின்று, குருத்துவ அர்ப்பணத்தின் ஏழ்மை, கீழ்ப்படிவு, கற்பு போன்ற புனித புண்ணியங்களை ஏற்று அன்று தொட்டு இன்றுவரை புனிதமாகக் காத்து வருகின்றார். இவர் தற்பெருமை, புகழ், சுயநலம், அறியாக் குழந்தை உள்ளமும், சிறந்த எண்ணமும் கொண்டவர். ஆன்மீக வாழ்வில் தான் ஆழமாக வாழ்வதுடன் மக்களுக்கும் அதை ஊட்டிவருகின்றார். ஏழைகளை, கைவிடப்பட்டவர்களை, கஷ்டப்பட்டவர்களை நன்கு அறிந்து, ஒரு தந்தையாக அவற்றை நிறைவேற்றுகின்றார்.

இன்று யாழ். கத்தோலிக்க திருச்சபையின் வளர்ச்சியிலே ஒரு பெரும் படிக்கல்லாக உள்ளார். பல திறமைகளையுடைய இவர் திருச்சபையின் வரலாறு பற்றி ஆழமான அறிவைக் கொண்டுள்ளார். இன்று யாழ். மறை மாவட்டமும், இவரை இந்நிலைக்கு உருவாக்கிய குடும்பமும் கரவையூர் ஆலய மக்களும், இவரை உப அதிபராகவும், ஆசானாகவும் கொண்டிருக்கும் புனித சவேரியார் பெரிய குருமடக்குடும்பமும் அகமகிழ்கின்றன. வெள்ளிவிழாக் காணும் தந்தையை வாழ்த்துவதுடன் அவர் தனது குருத்துவ வாழ்வில் இறையருள் பெற்று பொன்விழாக் காண அனைவரும் வாழ்த்துகிறோம். ▲

### கருத்தரங்கு

வலிகாமம் தெற்கு,மே11

சுகவாழ்வு நிலையத்தின் அனுசரணையுடன் உடல்நல வலுவூட்டல் கருத்தரங்கு நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

மாணவர் உளநலத்துக்குப் பொறுப்பான ஆசிரியரை வலுவூட்டல் கருத்தரங்குக்கு அனுப்பி வைக்குமாறு உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

(க-152)

## முதலாம் ஆண்டு நினைவு தினம்

மண்ணில் 14 - 07 - 1930



விண்ணில் 22 - 04 - 2000

### அமரர் சின்னத்துரை சோமசேகரம்

(ஓய்வூதியர், யாழ்.மாநகரசபை)

**திதி: 11.05.2001** (சங்கடஹர சதுர்த்தி)

எம்மை விட்டு உங்கள் உடல் பிரிந்து
ஆண்டு ஒன்று சென்றாலும்
எமது உயிர் உள்ளவரை உங்கள்
நினைவு எம்முடன் உயிர்வாழும்!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*39/2, பூநு வீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.*

உங்கள் நினைவில் வாழும்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், மைத்துனர், மைத்துனி, பெறாமக்கள்.

(87582)

# குணப்படுத்த முடியாத விலங்கு விசர் நோய்; நாய்களை முறையாக வளர்த்தால் ஆபத்தில்லை

விலங்கு விசர்நோய் எனவும் நீர் வெறுப்பு நோய் எனவும் அழைக்கப்படும் HYDROPHOBIA நோயைக் குணப்படுத்துவதற்கு மருந்து எதுவும் கிடையாது. இந்நோய் ஏற்பட்டவரின் உயிரைக் காப்பாற்ற முடியாது. இந் நோயையாளியை பரிகரிப்பவரை நோயாளி கடிக்கும் ஆபத்தும் உண்டு. இவரால் கடியுண்ட பரிகரிப்பாளரும் இந்நோய்க்கு ஆளாகி இறக்கநேரிடும்.

இத்தகைய பயங்கர நோயை ஏற்படுத்தும் விலங்குகளுள் பிரதானமானது நாயாகும். நாய் வளர்ப்பதானால், ஆண்டுக்கு ஒரு தடவை அவற்றுக்கு விலங்கு விசர் தடுப்பு வளர்ப்பு உரிமமாகத் தகடுகளை உள்ளூராட்சி மன்றங்கள் வழங்கும். நாயின் கழுத்தில் அத்தகட்டை கட்டி, அந்த நாய் வளர்ப்பதாக விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்ட வளவின் எல்லையிலுள் வளர்க்கலாம்.

சுகாதாரப் பரிசோதகர் வீடுகளில் சுகாதார நிலையைப் பரிசோதிக்கும் போது உரிமம் பெறாது நாய்வளர்க்கப்படுவது கண்டுபிடிக்கப்பட்டால், அந்த வதிவிட உரிமையாளர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

உள்ளூராட்சி மன்றங்கள் சைக்கிள்களுக்கான உரிமமாக ஆண்டு

## வருடம் தோறும் தடுப்பூசி ஏற்றுவது கட்டாயமாகும்

ஊசிஏற்றுவித்து, வேறு நாய்களால் வளர்ப்பு நாய் கடிக்கப்படும் சந்தர்ப்பம் ஏற்படாதவாறும, வதிவிட எல்லைகளைத தாண்டி வெளியே செல்லாதவாறும் வளர்க்கப்பட வேண்டும்.

ஊர் நாய், பொமேரியன் நாய், அல்சேஷன் நாய் என்ற எல்லா வகையான நாய்களுக்குமே விலங்கு விசர் நோய் ஏற்படும். இதனை நாய் வளர்ப்போர் அறிந்திருக்க வேண்டும்.

ஏனைய விலங்குகளை விட, நாய்கள் அபாயகரமானவை என்பதால், எல்லா நாடுகளிலும் நாய் வளர்ப்பை வரையறை செய்யும் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. நாய் வளர்ப்புச் சட்டத்தின் படி, நாய் வளர்ப்போர், நாய் வளர்க்கப்படும் இடம் அமைந்துள்ள உள்ளூராட்சி மன்றத்துக்கு எழுத்து மூலமாக அறிவித்து, புதிய கட்டணத்தையும் செலுத்தி நாயை பதிவு செய்ய வேண்டும். ஆண்டுதோறும் இப்பதிவு புதிப்பிக்கப்படவேண்டும்.

**நாய் வளர்ப்பு உரிமத் தகடு**

விலங்கு விசர் தடுப்பு ஊசி ஏற்றப்பட்ட ஆரோக்கியமான நாய் என்பதை உறுதிப்படுத்திய பின், நாய் தோறும் வழங்கும் தகடுகளும், நாய் வளர்ப்பதற்காக வழங்கும் தகடுகளும் வெவ்வேறு நோக்கங்களுக்காக வழங்கப்படுகின்றன. சைக்கிள்களுக்கு வழங்கப்படும் தகடு, வீதியில் செல்வதை அனுமதிப்பதற்காக வழங்கப்படுகிறது. நாய்களுக்கு வழங்கப்படும் தகடு வளவின் எல்லையை விட்டு வெளியேறாதவாறு, நாயை வளர்ப்பதற்காகவே வழங்கப்படுகிறது.

**வீதிகளில் நாய் மலம் கழிப்பதால்.....**

ஆனால் நாய் வளர்ப்போர் பலர் இத்தகடுகள் கட்டிய நாய்களை மலசலம் கழிப்பதற்காக வீதிகளுக்குத் துரத்தி விடுகின்றனர். நாய்கள், வீதிகளில் மலசலம் கழிப்பதால் அந்த வீதி வழியே செல்லும் மாணவச் சிறுவர்கள் அவற்றை மிதித்து வழுக்கி வீழ்ந்து தங்கள் உடைகளை அசுத்தப்படுத்துவதனாலும் துர்நாற்றத்தினாலும் ஏனையோரால் வெறுக்கப்படும் நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள்.

மேலும் நாய் மலம், வெய்யிலில் உலர்ந்து வாகனச் சில்லுகளால் தூளாக்கப்பட்டு காற்றுடன் கலந்து தூசியாகக் கிணறுகளில் வீழ்ந்து, கிணற்றை அசுத்தப்படுத்துவதுடன் சுவாசிக்கப்பட்டு தொய்வு நோயையும் ஏற்படுத்துகிறது.

நாய் வளர்ப்பவரின் வளவினுள்ளேதான் அவர்களது நாய் மலம் கழிக்க வேண்டும் என்பதை நாய் வளர்ப்போர் உணர வேண்டும்.

சட்டப்படி, வீதிவழியாக ஒரு நாயைக் கூட்டிச் செல்வதானால் அந்த நாயின் கழுத்தில் அந்த ஆண்டுக்குரிய உரிமத்தகடு கட்டப்பட்டிருக்கவேண்டும். நாயின் கழுத்தில் கட்டப்பட்ட சங்கிலியை, கூட்டிச் செல்பவர் தனது கையில் பிடித்திருக்க வேண்டும். கூடிச் செல்பவரின் கையிலிருந்து சங்கிலி நழுவி நாய்க்கும் அவருக்கும் இடையே தொடர்பு துண்டிக்கப்பட்டு நாய் அவருக்கு அருகில் நின்றாலும் அந்த நாய் கட்டாக்காலி நாய் எனவே கருதப்படும்.

**விபத்துகள், சண்டைகள்**

நாய்கள் கட்டகாலியாகத் திரிவதால் விலங்கு விசர், சொறி நோய்கள் பரவுவது மாத்திரமன்றி வீதி விபத்துக்களும் அயலவர் சண்டைகளும் ஏற்படுகின்றன. இவற்றைத் தடுப்பதற்கு உள்ளூராட்சி மன்றங்கள் நடவடிக்கை எடுக்கின்றன. கட்டாக்காலி நாய்களைக் கொன்று அழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன.

*ச. ஆ. கோபாலமூர்த்தி*

உள்ளூராட்சி மன்றங்கள் உட்பட எவரும் அநியாயமாக உயிர்க் கொலை செய்வதை விரும்புவது இல்லை. ஆனால், பொறுப்பற்ற முறையில் நாய் வளர்ப்போரால் உள்ளூராட்சி மன்றங்கள் அவற்றைக் கொன்றொழித்து மக்களைக் காப்பாற்ற நிர்ப்பந்திக்கப்படுகின்றன.

**நாய்களைக் கொல்லும் நிர்ப்பந்தம்**

தங்களது உயிரைத் துச்சமென மதித்துக் கட்டாக்காலி நாய்களைக் கொல்லும் நடவடிக் கைகளில் உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்களும், சுகாதார உத்தியோகத்தர்களும் ஈடுபடுகிறார்கள். இவர்களது நடவடிக்கையைச் சில நாய் வளர்ப்போர் தடுக்கிறார்கள். பிள்ளை வளர்ப்பது போல வளர்த்த நாய்களைக் கொல்லவேண்டாம் என்று கூறுகிறார்கள்.

## நோய் வந்தால் மருந்தில்லை உயிரைக் காப்பாற்றமுடியாது

இவர்கள் பிள்ளைகளை மலசலம் கழிப்பதற்கு வீதிகளுக்குத் துரத்துவதில்லையே. பிள்ளைகளைத் தத்தமது வளவின் எல்லையுள் மாத்திரம் மலம் கழிக்க அனுமதிப்பது போல, பிள்ளை போல நாய்களை வளர்ப்பதானால், அவற்றையும் தமது வளவின் எல்லையின் உள்ளேயே மலசலம் கழிக்கச் செய்து வீதிகளின் சுகாதாரத்தைப் பேணவேண்டும்.

கட்டாக்காலி நாய்களை அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபடும் சுகாதாரப் பகுதி உத்தியோகத்தர்களையோ, உள்ளூராட்சிமன்ற உத்தியோகத்தர்களையோ எவ்வகையிலாவது தடுப்பது, பிணை செலுத்தி வெளியே வரமுடியாத தண்டனைக்கு ஆட்படுத்தும் குற்றம் என்பதை உணரவேண்டும்.

**வீட்டினுள் கிருமிகள்**

நாய்கள் அனைத்தும் மனிதரின் மலத்தை உண்ணும் விருப்பு உடையவை. நாய்கள் மலத்தை உண்டபின் நாக்கினால் உடல் முழுவதையும் நக்கும். இதனால் நாயின் உடல் முழுவதும் மலமும் கிருமியும் நிறைந்திருக்கும். கட்டாக்காலியாகத் திரிந்த நாய் பின்னர் வீட்டினுள் அனுமதிக்கப்பட்டால் அந்த வீட்டினுள் கிருமிகள் நிறைந்து நோயுண்டாகும்.

பொமேரியன் நாய் வளர்த்த ஒருவர், தனது மலகூடத்திற்கு ஒரு தடவை போதிய நீர் ஊற்றவில்லை எனவும், தனது பொமேரியன் நாய் மல கூடத்தினுள் புகுந்து மலம் உண்பதைத் தான் கண்டதாகவும், அன்றுடன் தாம் நாய் வளர்ப்பதை நிறுத்திவிட்டதாகவும் கூறினார். பொறுப்புடன் நாய் வளர்ப்போம். நோய் தவிர்ப்போம்.

## தெய்வீக ஸ்தலங்களில்



திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்துக்கு பல லட்சம் ரூபா செலவில் பஞ்சதள இராஜகோபுரம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இராஜகோபுரத்தின் அழகிய தோற்றத்தைப் படத்தில் காணலாம்.

திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலய ஸ்தபதியார் கலாபூஷணம் ஆ.ஜீவரட்ணம் ஆச்சாரியார் குடும்பத்தினர் தமது அன்பளிப்பாக இராஜகோபுரத்தை அமைத்துக் கொடுத்துள்ளனர். (ம-7)



யாழ் அத்தியடிப்பிள்ளையார் ஆலய தேர்த்திருவிழா அண்மையில் இடம் பெற்றது. தேர் இருப்பிடத்தை விட்டுக் கிளம்பிய போது எடுக்கப்பட்ட படம் இது. (ம-9)

## 400 அபிவிருத்தித் தொண்டர்களுக்கு புதனன்று நியமனக் கடிதங்கள்

யாழ்ப்பாணம்,மே 11

சங்கானை, மானிப்பாய், உடுவில், தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவுகளில் இருந்து நேர்முகப் பரீட்சை மூலம் தகுதிபெற்ற 400 அபிவிருத்தித் தொண்டர்களுக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை நியமனக்கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில் தொண்டர்களுக்கான நியமனக் கடிதங்களை ஈ.பி.டி.பி யின் யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.வி.குகேந்திரன் (ஜெகன்) வழங்கினார்.

இரு தொகுதிகளாக நியமனம் வழங்கும் வைபவத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் கலந்து கொண்டு தொண்டர்கள் மத்தியில் உரையாற்றினார்.

அவர் தனது உரையில்:-

எமது சமூகத்தின் நற்பிரஜைகளாக இந்த அபிவிருத்தித் தொண்டர்கள் செயறபடவேண்டும். அத்துடன் சமூகத்திற்கு ஒரு சிறந்த சேவையாளர்களாகப் பணியாற்ற வேண்டும். இதற்காக உங்களுக்கு வழங்கப்படும் தொழில்சார் பயிற்சி நெறியுடன், விஞ்ஞானம், பொதுஅறிவு, ஆத்மீகம், சுகாதாரம், சமூகம் ஆகிய துறைகளில் அறிவை வளர்த்துக் கொள்ளவும் விசேட வகுப்புகள் நடத்தப்படும்.

எமது பிரதேச அபிவிருத்திக்காக சிரமதான வேலைகளிலும் ஈடுபட வேண்டும். இதற்கு விசேட ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் கே.வி. குகேந்திரன் உரையாற்றுகையில், தொண்டர்களாகிய நீங்கள் சமூக முன்னேற்றத்திற்காக, உழைப்பதுடன் உங்களையும் முன்னேற்றிக் கொள்ள இதனை தகுந்ததொரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

சங்கானை பிரதேச செயலர் கலாநிதி க.குணராசா உரையாற்றுகையில் ஒரு சமூகத்ததிற்கு அரசியல் விடுதலை, பொருளாதார விடுதலை, சமூக விடுதலை ஆகியவை தேவை. கடந்த இருபது வருடமாக நாம் அரசியல் விடுதலை மட்டும் கவனத்தில் கொண்டதனால் பொருளாதார, சமூக விடுதலையை கைவிட்டுவிட்டோம். இக்கைவிடப்பட்ட விடுதலையைப் பெற்றுத்தர அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஈடுபட்டுள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

இவ்வைபவத்திற்கு, பிரதேச சபைத் தலைவர்களான க.மணிபல்லவராஜன், திரிலோகநாதன், வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் ஜீவா, வடக்கு அபிவிருத்தி அமைச்சின் தமிழ் விவகாரங்களுக்கான பணிப்பாளர் நல்லையா, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் வேதநாயகம், தெல்லிப்பழை பிரதேச செயலர் பத்தினியம்மா, உடுவில் பிரதேச செயலாளர் கேதீஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(க)

## கொமன்வெல்த் செயலர் விஜயம் ஒத்திவைப்பு

பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் டொன் மக்கினோன் இலங்கைக்கான தனது விஜயத்தை சுகவீனம் காரணமாக கால வரையறையின்றி ஒத்திவைத்துள்ளார்.

இந்த அமைப்பின் தலைவர்களின் கூட்டம் தொடர்பான விடயமாக அவர் செவ்வாய்க்கிழமை கொழும்புக்கு வரவிருந்தார்.

புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## ஆயர் அபிசேக 34ஆம் ஆண்டு நிறைவு தினம்

யாழ்.மறைமாவட்ட இளைப்பாறிய ஆயர் வ.தியோகுப்பிள்ளை இன்று தனது 34ஆவது ஆண்டு ஆயர் அபிசேக நிறைவு தினத்தை கொண்டாடுகின்றார். இவர் யாழ். மறை மாவட்டத்தில் 25 வருடங்கள் ஆயராக இறைபணி யாற்றிய பின்னர் தற்போது யாழ்.ஆயர் இல்லத்தில் ஓய்வு எடுத்து வருகிறார். இவர் குருவாக திரு நிலைப்படுத்தப்பட்ட 60ஆவது ஆண்டு நிறைவு விழாவை எதிர் வரும் டிசெம்பர் மாதம் 22 ஆம் திகதி கொண்டாடவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## குவைத்தில் தமிழர் சுட்டுக்கொலை; இலங்கைப் பிரஜை கைதானார்

கொழும்பு,மே11

மதுபானக் கடத்தல் விவகாரத்தில் ஈடுபட்ட கனடா நாட்டுப் பிரஜை ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டது தொடர்பாக குவைத் பொலீஸார் இலங்கையர் ஒருவரைக் கைது செய்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொலையுண்டவர் குவைத் நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்தவர். 57 வயதான தமிழரான இவர் இலங்கையில் இருந்து சென்று கனடா பிரஜையானவர்.

குவைத்தில் தடை செய்யப்பட்டுள்ள மதுபானத்தை கொலையுண்டவர் தமக்கு வழங்கிவந்தார் என்றும், கள்ளக் கடத்தல் தொடர்பான கொடுக்கல் வாங்கல் காரணமாகவே தான் அவரைச் சுட்டதாகவும் சந்தேகநபர் பொலீஸாரிடம் தெரிவித்துள்ளார்.

பலியானவர் மார்க்கண்டு கனகசபை என்று ஏ.எவ்பி. செய்தியொன்று தெரிவிக்கின்றது. அவரிடமிருந்து 1000 டொலர்கள் கொள்ளையடிக்கப்பட்டிருந்தன. (க)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

**LISTER ENGLAND BRAND NEW 3 PHASE ORIGINAL 9.8 K.V.S. GENERATORS** விற்பனைக்குண்டு. தொடர்பு:- K.முத்துக்குமார், 75/10, மூன் ஒழுங்கை, பலாலி வீதி, திருநெல்வேலி. **PHONE 3376.** (87564)

### மணமகன் தேவை

இந்து உயர் குடும்பத்தைச் சேர்ந்த, செவ்வாய்க் குற்றமற்ற, **4'9"** உயரமுள்ள, அழகிய நற்குணமுள்ள, 1959இல் பிறந்த, கேட்டை முதலாம் பாதம், விகிதர் பெண்ணுக்கு வெளிநாட்டிலிருந்து வந்திருக்கும் மாமனார், பொருத்தமான, நற்குணமுள்ள மணமகனை எதிர்பார்க்கின்றார். தொடர்பு:- விளம்பர இல.1282, **C/o** உதயன், யாழ்ப்பாணம். சகல விவரத்துடன் 15.05.2001 இற்கு முன் தொடர்புகொள்ளவும். (87562)

### வீடு, வளவு விற்பனைக்கு

கோப்பாய் வடக்கு, பூதர் மடத்தடி, பருத்தித்துறை பிரதான வீதிக்கு அருகில் சகல வசதிகளும் கொண்ட (31/2 பரப்பு) வீடுவளவு விற்பனைக்குண்டு. தொடர்பு: திரு.மனோகரன், மனோலைற், கோப்பாய். (87599)

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள பாவித்த **REMINGTON** ஆங்கில தட்டச்சு இயந்திரம் விற்பனைக்குண்டு. 141, 143, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். **T.P. 2037** (87555)

புறொயிலர் கோழிகளும், முட்டைகளும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள "அண்ணா" ஸ்ரேஷன் றோட், இணுவில். **(C/16641)**

### இறைச்சிக்கோழி விற்பனை

இறைச்சிக்கோழி **(BROILER)** விற்பனைக்குண்டு, மற்றும் மிகவும் நல்ல நிலையிலுள்ள குளிர்சாதனப் பெட்டி **(SISIL - R80)** ஒன்றும் விற்பனைக்குண்டு. தொடர்பு: COLLEGE LANE, VADDUKKODAI. (87631)

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த செவ்வாய்க் குற்றமற்ற, 1972-06-20இல் பிறந்த அத்த நட்சத்திர, குவியில் உள்ள மணமகனுக்குப் பெற்றோர் பொருத்தமான மணமகளைத் தேடுகின்றனர். உடன் தொடர்பு கொள்க. **UNITED** திருமண சேவை **C/o** ஜெயராணி, நவாலி, வடக்கு, ச.ச.நிலையம் அருகில். **(C/16646)**

### விற்பனைக்குண்டு

மர அலுமாரிகள், சிங்கர் தையல் மெசின், பீங்கான் கோப்பைகள் (டினர்செற்), எவர் சில்வர் பொருள்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: செ.தனபாலசிங்கம், 179/3, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். நேரம் காலை 8 மணி தொடக்கம் பகல் 12 மணி வரைக்கும். (87605)

### டிப்ளோமா மாணவருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், மே11

பட்டப்பின் கல்வி டிப்ளோமா யாழ். இந்துக்கல்லூரி நிலைய இறுதி ஆண்டு ஆசிரிய மாணவர்களை எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு குழு புகைப்படம் எடுப்பதற்காக ஒன்று கூடுமாறு ஒன்றியத் தலைவர் அறிவித்திருக்கிறார். (ஐ)

### ஆங்கிலம் விசேடமாக

**O/L CREDIT, DISTINCTION** பெறுபேறடைவதற்கும் **G.A.Q.** ஆண்டு 6-10 வரை ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும். ஆசிரியர், 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் பின்புறம், திருநெல்வேலி. (87595)

### காணி விற்பனைக்கு

நவாலி வடக்கில் நவரத்தினம் (நகுலர் மாஸ்ரர்) வீட்டுக்கு அருகில் இருக்கும் வீடு கட்ட உகந்த கிணற்றுடன் இருக்கும் 3 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: செ.தனபாலசிங்கம், 179/3, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். காலை 8.30 முதல் பகல் 12.00 மணி வரை. (87604)

### S.L.Ac.S.

மேற்படி பரீட்சைக்கான கணக்காய்வும், நுண்ணாய்வும் நூல் வெளிவந்துவிட்டது. ஆசிரியர்: இ.இரட்ணம், சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம். பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.(87553)

### கார் விற்பனைக்கு

**EN. 6571**, இலக்கமுடைய ஒஸ்ரின் கேம்பிரிட்ஜ் கார் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- **S.**அன்ரன்லால், 'தம்மளை', அளவெட்டி மேற்கு. (87593)

### தவறிவிட்டது

மயில்வாகனம் சிவகுமார் என்பவருடைய விஷேட அ.அட்டை (இல.0902039023) திருநெல்வேலி சந்தைக்கும் விபுலானந்தர் வீதி அரியாலைக்கும் இடையில் 07-05-2001 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல.4, கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் ஒப்படைக்கவும். (87622)

இல.1, புதிய பூங்கா வீதி, குருநகரைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை நியூட்டன் என்பவருடைய வி. அ. அட்டை (இல.0901008522) யாழ். பெரிய கடைக்கும் குருநகருக்குமிடையில் 08-05-2001 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல. 391, கடற்கரை வீதி, குருநகர் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (87602)

61, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம் என்ற முகவரியைச் சேர்ந்த D.A.M. குணசிங்கம் என்பவரது தேசிய அ.அ. (இல.282060167v), விசேட அ.அ. (இல.0901000268) என்பன 06.05.2001 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். (87639)

## கத்தி வெட்டுக்கு இலக்கான கொக்குவில் வாசி

யாழ்ப்பாணம் மே11

கொக்குவில்வாசியான குடும்பஸ்தர் ஒருவர் கத்தி வெட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொக்குவில் நந்தாவில் அம்மன் கோயிலடியைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை கமலநாதன் (வயது - 47) என்ற குடும்பஸ்தரே கடந்த 8ஆம் திகதி கத்தி வெட்டுக்கு இலக்கானவர் ஆவார்.

நாவாந்துறையைச் சேர்ந்த 12 பேர் 3 ஓட்டோக்களில் வந்து தன்னைக் கத்தியால் வெட்டி விட்டுச் சென்றதாகக் காயமடைந்தவர் தெரிவித்தார். (க-5)

## துயர் பகிர்கின்றோம்

எமது வளலாய்ப் பகுதி கிராம உத்தியோகத்தர் திரு.கு. கதிரமலைநாதன் அவர்களின் பாசமிகு அன்னை

**திருமதி குமாரசுவாமி சரஸ்வதி**

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு -

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம்,
வலி.கிழக்கு,
கோப்பாய்.

(87644)

**மாவனல்லவில் பாதிப்புற்றோருக்கு எமது அனுதாபங்கள்**

# தமிழ் - முஸ்லிம் உறவுகளை வலுப்படுத்த என்றும் தீர்க்கமாக் குரல் கொடுப்போம்

## யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம்,மே11

மாவனல்ல பகுதியில் சிங்கள ஆயுதப்படைகளாலும் காடையர்களினாலும் கொல்லப்பட்ட படுகாயமடைந்த முஸ்லிம் சகோதரர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் தமிழ்- முஸ்லிம் உறவுகளை வலுப்படுத்த நாம் என்றும் குரல் கொடுப்போம்.

- இவ்வாறு மாவனல்ல சம்பவத்தைக் கண்டித்து யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மாவனல்லப் பகுதியில் தமிழ் பேசும் முஸ்லிம் சகோதரர்கள் சிங்கள அரசபடைகளினால் கொல்லப்பட்டமையையும், அதன் எதிரொலியாக நிகழ்ந்த இன மோதல்களில் முஸ்லிம் சகோதரர்கள் பாதிக்கப் பட்டமையையும் யாழ்.பல்கலைக் கழக மாணவர்களாகிய நாம் வெகு வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

சிங்கள பேரினவாத அடக்குமுறைக் கொடுமைகளைக் கடந்த 17 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவித்து வரும் தமிழ் பேசும் மக்களின் மீது காலத்திக்குக் காலம் ஆட்சிபீடத்திலிருக்கும் சிங்கள அரசியல் தலைமைகள் இனக் கலவரத்தைக் கட்டவிழ்த்து விடுவது இலங்கையின் வரலாற்றில் ஒன்றும் புதிதல்ல இந்த நிலைமையில் தமிழ்- முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து தமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக ஒரே குரலில் - ஒரே கொள்கையில் உறுதியாக இருப்பதுதான் சிங்கள பேரினவாத இரும்புக் கரங்களை உடைத்தெறிவதற்கான ஒரே மார்க்கமாகும்.

அண்மையில் நிகழ்ந்த சிங்கள - முஸ்லிம் இன மோதல் இலங்கைத் தீவில் சமாதானத்துக்கான நம்பிக்கைக்கீற்றை மறுதலிப்பதாகவும் பேரினவாதத் தீ, அக்கினிச் சுவாலையாகக் கொழுந்து விட்டு எரிவதையுமே சுட்டி நிற்கின்றது. சிங்கள ஆயுதப் படைகளினாலும், காடையர்களினாலும் கொல்லப்பட்ட, படுகாயங்களுக்குள்ளான எமது தமிழ் பேசும் முஸ்லிம் சகோதரர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் தமிழ் - முஸ்லிம் உறவுகளை வலுப்படுத்த எமது யாழ்பல்கலைக் கழக மாணவர்கள் என்றும் தீர்க்கமாகக் குரல் கொடுப்பார்கள் என உறுதி கூறுகின்றோம். - என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-5)

### புதிய யோசனைகளை ரணில் நிராகரித்தார்

கொழும்பு,மே11

கட்சியை மேலும் ஜனநாயகமயப்படுத்துவதற்காக மிதவாத எம்.பிக்கள் சிலரால் முன்மொழியப்பட்ட சீர்திருத்த யோசனைகள் நேற்று முன்தினம் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினால் நிராகரிக்கப்பட்டன.

தேசியப் பட்டியல் எம்.பி.மிலிந்த மொறக்கொட இதனைச் சமர்ப்பித்திருந்தார்.

மிதவாதிகள் பல பிரேரணைகளை முன்வைத்திருந்தனர். கட்சித் தலைவரும், பிரதித் தலைவரும் கவுன்சில் மூலம் தெரிவுசெய்யப்பட வேண்டும். பதவிக்காலம் தேர்தலுக்கிடையிலான காலப்பகுதியை அடிப்படையாகக் கொண்டிருக்கும் துணைத் தலைவர் பதவி அவசியமற்றது எனினும், அவ்வாறான ஒரு பதவி விடயத்திலும் இதே நடைமுறைகள் பின்பற்றப்படவேண்டும். முழு உறுப்பினர்களில் 50 சதவீதத்தினரின் வாக்குகள் பெற்றவரே இப் பதவிகளை வகிக்கலாம். தேசிய அமைப்பாளர் என்று ஒரு பதவி உருவாக்கப்படவேண்டும் என்பன அவற்றின் முக்கியமானவையாகும். (க)

## ஆறாத்துயரில் ஓராண்டு



**செல்வன்**

**குணரத்தினம் கிறிஸ்ரன்சன் நிரோஜன்**

மண்ணில்: 15.02.1982

விண்ணில்: 11.05.2000

நட்பின் மகத்துவத்தை உணரவைத்த நண்பா!
பிறிதொருகால் என் நட்பாய்ப் பிறப்பதற்கு வாராயோ!
நீரோடும் கண்களுக்கு நிம்மதியைத் தாராயோ!

மாலையூர்,
யாழ்ப்பாணம்.

நட்பின் நினைவுகளுடன்
சு.சுதர்ஷன்

(87649)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

# வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

01. கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 11.05.2001 - 22.05.2001 பி.ப. 2.00 மணிவரை
02. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி:- 23.05.2001 ந.ப. 12.00 மணிவரை
03. கேள்விப்பத்திரம் திறந்து பார்க்கப்படும் திகதி:- 24.05.2001 பி.ப. 3.00 மணி
04. ஒவ்வொரு வேலைக்கும் அதற்கெதிரே காட்டப்படும் மீளளிக்கப்படும், மீளளிக்கப்படாத கட்டணங்களைச் செலுத்துபவர்களுக்கு மட்டுமே கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்.

| வேலையின் விவரம் | மீளளிக்கப்படும் கேள்விப்பத்திர வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் (ஜி.எஸ்.ரி) உட்பட |
|---|---|---|
| 01. சுன்னாகம் பொது நூலகத்தில் துவிச்சக்கரவண்டி தரிப்பிடமும் இணைத்து காவலாளி அறையும். | 900.00 | 168.75 |
| 02. சுன்னாகம் மத்திய சந்தையில் உள்ள வெற்றிலைக் கொட்டகை அமைத்தல் | 400.00 | 112.50 |
| 03. ஆயுர்வேத வைத்தியசாலைக்கான பிரிவிடுதல் வேலை (ஏழாலை) | 825.00 | 168.75 |
| 04. புகையிரத நிலைய கிழக்கு வீதி கற்கள் இட்டு தாரிடல் | 5700.00 | 337.50 |
| 05. சபாபதிப்பிள்ளை வீதி கற்கள் இட்டு தாரிடல் | 1300.00 | 225.00 |
| 06. ஏழாலை உப அலுவலகத்திற்கு மதில் கட்டல் | 2000.00 | 225.00 |
| 07. ஏழாலை சேமக்காலை வீதி திருத்தம் | 1250.00 | 168.75 |
| 08. லவ் லேன் திருத்தம் (வட்டுவினி தொடங்கி சிங்கத்தின் கலட்டியூடாக லவ்லேன் நோக்கிச் செல்லல்) | 1275.00 | 168.75 |
| 09. பெயர்ப்பலகை செய்து விநியோகித்தல் | 50.00 | 112.50 |
| 10. குழாய்க்கிணறு திருத்தம் | 100.00 | 112.50 |
| 11. ஏழாலை பொது நூலகத்துக்கு அலுமாரி செய்தல் | 200.00 | 112.50 |
| 12. மாருட்டி வீதி கற்கள் இட்டு தாரிடல் | 1050.00 | 168.75 |

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களின் மூலப்பிரதியை " தலைவர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்" என்ற முகவரிக்கும், அதன் பிரதியை " பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்" என்னும் முகவரிக்கும் உரிய காலத்துக்கு முன்னர் பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். மேலதிக விவரம் தேவைப்படுவோர் அலுவலக நேரத்தில் சபையின் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு: "இக்ராட்" நிறுவனத்தில் பதிவு செய்தவர்களுக்கும் மற்றும் திணைக்களங்களில் பதிவு செய்தவர்களுக்கும் ஒப்பந்தப்பத்திரங்கள் வழங்கப்படும்.

க.நவநீதன்
உபதலைவர்

வலி.தெற்கு பிரதேச சபை, சுன்னாகம். (C/16687)

# யுத்தத்தாலும் இரத்தக்களரியாலும் எவற்றையுமே சாதிக்க முடியாது

## பாப்பரசர் சிரியாவில் தெரிவிப்பு

டமாஸ்கஸ், மே 11

யுத்தங்களும் இரத்தக் களரியும் எதனையும் சாதிக்க உதவப் போவதில்லை. அதற்கு மாறாக சர்வதேச சட்டங்களும் ஐ.நா. தீர்மானங்களும் உலக நாடுகளனைத்திலும் நடைமுறைப்படுத்தப்படுவதால் மட்டுமே பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும்.

— பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சிரியாவுக்கு விஜயம் மேற்கொண்ட அவர் அங்கிருந்து புறப்படுவதற்கு முன்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனைத் தெரிவித்தார். மத்திய கிழக்கு மோதல்கள் குறித்தே அவர் மேற்கண்ட கருத்தைக் கூறினார்.

இஸ்ரேலும் பலஸ்தீனமும் பரஸ்பரம் மோதல்களைக் கைவிட்டு சமாதானத்தை ஏற்படுத்த முயல வேண்டும் என்றும் அவர் கூறினார்.

அவரது இந்தக் கருத்துக்களை சிரியா வரவேற்றுள்ளது. பாப்பரசரின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் இருந்து, இஸ்ரேல் வெளியேற வேண்டும் அதுவே சமாதானத்திற்கு வழி சமைக்கும் என்றும் சிரியா தெரிவித்துள்ளது. (ம-7)

## காஷ்மீரில் குண்டு வெடிப்பு; 8 பேர் பலி!

ஸ்ரீநகர், மே 11

காஷ்மீரில் 'ஐஸ்கிறீம்' விற்பனை வாகனம் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததில் சிறுமி உட்பட 8 பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் எல்லைப் பாதுகாப்புப் படை அதிகாரிகள் உட்பட 6 பாதுகாப்புப் படையினர் காயமடைந்தனர். (ஒ)

## படைச்சாதனத் தயாரிப்பில் தனியார்துறை

புதுடில்லி, மே 11

இந்திய இராணுவத்துக்கான படைச் சாதனங்களைத் தயாரிக்க தனியார் துறையினருக்கு அனுமதி வழங்க இந்திய மத்திய அரசு தீர்மானித்துள்ளது.

இதற்கென பாதுகாப்பு அமைச்சகம் தனியார் துறைக்கு உரிமங்களை வழங்க உள்ளதாக நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் பிரமோத்மகாஜன் தெரிவித்தார். (ஒ-4)

## இந்தியா, பாகிஸ்தானுடன் சீனா கொண்டுள்ள உறவு நிலை

### வெளியுறவுத்துறை அதிகாரி விவரிப்பு

பெய்ஜிங், மே 11

இந்தியாவுடனும பாகிஸ்தானுடனும் தனக்குள்ள உறவு, ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டதல்ல என்று சீனா அறிவித்துள்ளது.

உலக அரங்கில்

சீனப் பிரதமர் சூறொங்ஜியின் தெற்காசிய நாடுகள் மற்றும் தாய்லாந்துக்கான உத்தியோக பூர்வ விஜயம் குறித்து செய்தியாளரிடம் வெளியுறவுத்துறை அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் சமமான உறவுகளைப் பேணுவதற்கு சீனா முயல்வதாக வெளியான செய்திகளை மறுத்த அவர், இந்தியாவுடனும் பாகிஸ்தானுடனும் சீனா தனித்தனியே வெவ்வேறு நிலைகளிலேயே உறவுகளைப் பேணிவருகின்றது.என்றார் —

இந்தியாவுடனான உறவுகளில் சில சிக்கல்கள் இருப்பதாகத் தெரிவித்த அவர், இருநாடுகளுமேஇந்தச் சிக்கல்களை உறவுகளில், புதிய சகாப்தம் ஒன்றைப் படைக்க முயன்று வருகின்றன என்றும் சொன்னார்.

அதேசமயம் தெற்காசிய நாடுகளுக்கான தனது விஜயத்தின் போது பாகிஸ்தான், நேபாளம், இலங்கை, மாலைதீவு ஆகிய நாடுகளுக்குச் செல்லும் சீனப்பிரதமர் இந்தியாவுக்கு விஜயம் செய்ய மாட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. [ம]

## ஈரானில் வெள்ளப்பெருக்கு; 23 பேர் பலி

தெஹ்ரான், மே 11

ஈரானின் வடகிழக்கு நகரில் ஏற்பட்ட கடும் வெள்ளப்பெருக்கு காரணமாக 23 பேர் உயிரிழந்தனர்; 170 பேர் காயங்களுக்கு உள்ளாகினர்.

கடந்த சில நாள்களாக இப்பகுதியில் தொடர்ச்சியாகப் பெய்த கடும் மழை காரணமாக இந்த வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

வெள்ளத்தால் 200 வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டன. 5000 ஏக்கர் பயிர்ச்செய்கை நிலமும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதுடன் 2500 கால்நடைகளும் கொல்லப்பட்டன. (ம)

## சீனச் சுரங்கத்தில் வெடி விபத்து!

பெய்ஜிங், மே 11

சீனாவின் வட கிழக்குப் பகுதியில், நிலச்சுரங்கம் ஒன்றில் ஏற்பட்ட வெடி விபத்தில் 54 சுரங்கப் பணியாளர்கள் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

## இந்தியாவில் குழந்தைகள் மர்ம மரணம்

மும்பை, மே 11

இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலம் பழங்குடிப் பிரதேசத்தில் திடீரென்று பெருமளவில் சிறு குழந்தைகள் இறந்து வருகின்றனர்.

குழந்தைகள் இறப்பதற்கான காரணம்இதுவரைகண்டு பிடிக்கப்படவில்லை. அதற்கான முயற்சிகளில் மருத்துவ நிபுணர்கள் ஈடுபட்டுள்ளனர்.

## ஐரோப்பிய ஒன்றியம் எச்சரிக்கை

டாக்கா, மே 11

பங்களாதேஷில் பகைமை அரசியல் சண்டைகள் மோசமான அளவில் நிகழ்வது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் கவலை தெரிவித்துள்ளது

அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தினால் தான் பங்களாதேஷுக்கு இனிமேல் உதவிகள் வழங்கப்படும் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் எச்சரித்துள்ளது.


## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 12 — 10 — 1912

விண்ணில் 04 — 05 — 1999

### ஸ்ரீமதி அன்னப்பிள்ளை கதிர்த்தம்பி

திதி: 11 . 05 . 2001 சங்கடகரசதுர்த்தி

ஆனதோ ஆண்டிரண்டு அன்னையே நீர் எமைப் பிரிந்து
அகவையோ நூறுகாண அரனையே வேண்டி நின்றோம்—
மாதரசே!
பாச மகளென்னை வழிபார்த்திருக்கச் சொல்லி விட்டுப்
பரமபதம் நாடியதேன்
குலக் கொழுந்தாய் வந்தெங்கள் குறைதீர்க்கவா
குல விளக்கே நீரணைந்தீர்!

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

திருமதி புனிதவதி சிவஞானம் (மகள்)
ரஜனி தொலைத் தொடர்பகம்
ஐயா கடையடி,
சாவகச்சேரி வடக்கு,
மீசாலை. (87641)


# தமிழக அரசியலில்...

## தேர்தலில் போட்டியிடுவது இதுவே கடைசித் தடவை

### கருணாநிதி நேற்று அறிவிப்பு

சென்னை, மே 10

''நான் தேர்தலில் போட்டியிடுவது இதுவே கடைசித்தடவை''

—இவ்வாறு அறிவித்துள்ளார் தி.மு.க தலைவரும் தமிழக முதல்வருமான மு. கருணாநிதி

நேற்றுக்காலை சென்னை கோபாலபுரத்தில் உள்ள சாரதா மேல்நிலைப்பள்ளி வாக்காளிப்பு நிலையத்தில் மனைவி தயாளம்மாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் ஆகியோருடன் வந்து வாக்களித்தார்.

வாக்களிப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தி.மு.க கூட்டணி மீண்டும் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளதாகக் கூறிய அவர் இந்தத் தேர்தலின் பின்னர் தான் தேர்தல்களில் போட்டியிடப் போவதில்லை என்றும் தெரிவித்தார். (ம)

## மக்களுடன் வரிசையில் நின்று வாக்களித்தார் ஜெயலலிதா

### தோழி சசிகலாவும் உடனிருந்தார்

சென்னை, மே 11

அ.தி.மு.க பொதுச் செயலர் செல்வி ஜெயலலிதா நேற்று சென்னை ஆயிரம் விளக்குத் தொகுதியில் உள்ள வாக்களிப்பு நிலையம் ஒன்றில் மக்களுடன் மக்களாக வரிசையில் நின்று வாக்களித்தார். அவரது இணை பிரியாத் தோழி சசிகலாவும் அவருடன் உடனிருந்து வாக்களித்தார்.

வாக்களிப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ஜெயலலிதா அ.தி.மு.கவுக்கு வெற்றி வாய்ப்புகள் நன்றாகவே உள்ளதாகத் தெரிவித்தார்,

மின்னணு வாக்குப் பதிவுகள் மந்தமாக நடைபெறுகின்றன என்றும்—

பல இடங்களில் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் பழுதுபட்டிருந்தன என்றும்—அவர் குற்றம் சாட்டினார். (ம)

## வாக்குரிமை இருந்தும் வாக்களிக்க முடியாத நிலையில் தமிழகத்தில் ஒரு லட்சம் பேர்

சென்னை, மே 11

வாக்குரிமை இருந்தும் நேற்று அதனைப் பயன்படுத்த முடியாத நிலையில் தமிழகத்தில் ஒரு லட்சம் பேர் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியத் தேர்தல் சட்டத்தின்படி அரச மருத்துவமனைகள், சிறைகளில் தங்கி இருப்பார்கள் கல்லூரி விடுதிகளில் தங்கி உள்ளோர், தமது சொந்த இடத்தில் இருந்து வெளியேறி வேறு இடங்களில் வசித்து வருவோர் ஆகியோர் தேர்தலில் வாக்களிக்க முடியாது.

தமிழ் நாட்டில் இத்தகையோர் எண்ணிக்கை ஒரு லட்சத்துக்கும் அதிகம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

தமிழகத்தில் உள்ள அரசதனியார் கல்லூரி விடுதிகளிலும் அரச ஆஸ்பத்திரிகளிலும் மட்டும் சுமார் 40 ஆயிரம் பேர் தங்கி உள்ளனர்என்றும் அவர்கள் கூறினர். (ம - 7)

## இந்திய வீரர்களைக் கொன்றதாக பங்களாதேஷ் எல்லைப்படை மீது அந்நாட்டு நீதிமன்றத்தில் வழக்கு

டாக்கா, மே 11

பங்களாதேஷில் எல்லைப் பாதுகாப்புப் படைக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. தமது எல்லைப் பாதுகாப்புப் படையினர் மீதான குற்றச்சாட்டு ஒன்றுக்காக பங்களாதேஷ் வழக்குப் பதிவு செய்திருப்பது இதுவே முதற்றடவை என்று கூறப்படுகிறது.

கொலைக் குற்றம் உட்பட பல கொடூரமான குற்றங்கள் இழைத்த அல்லது காரணமாக இருந்ததாக இந்த வழக்கில் குற்றங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

வடமேற்கு மாவட்டமான துலிகிராமில் உள்ள நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்கில் எல்லைப் பாதுகாப்புப் படைத் தலைவர் ஜி.கே. கவுர் மற்றும் பெயர் குறிப்பிடப்படாத 300 வீரர்கள் ஆகியோருக்கு எதிராகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

சமீபத்தில் இந்திய எல்லையில் நடந்த மோதலில் தம்மிடம் சிக்கிய இந்திய வீரர்களைக் கொடூரமாகச் சித்திரவதை செய்து கொன்றது தொடர்பாகவே மேற்படி வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இதற்கிடையில்,

இந்திய, பங்களாதேஷ் எல்லைப் பிரச்சினை குறித்த உத்தியோக பூர்வப் பேச்சுக்கள் டாக்காவில் நடத்தப்படும் என்று பங்களாதேஷ் தெரிவித்துள்ளது. (ஒ-4)

# வன்னிக்குச்சென்றுபுலிகளைசந்திக்க மகாநாயக்க தேரர்கள் விருப்பம்

கொழும்பு மே. 11

இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காணும் பொருட்டு வன்னிக்குச்சென்று விடுதலைப் புலிகளை சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு பௌத்த மகா சங்கத்தைச் சேர்ந்தமகா நாயக்கதேரர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

—இவ்வாறு கத்தோலிக்க ஆயர்கள் சங்கத்தின் செயலாளர் நாயகமும் இரத்தினபுரி ஆயருமான வணபிதா மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

அண்மையில் தாம் உட்பட ஒன்பது ஆயர்கள் வன்னி சென்று திரும்பியது தொடர்பாக கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில வார இதழுக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:- மகா நாயக்க தேரர்களின் இந்த விருப்பத்தை வன்னியில் தமிழ்ச் செல்வனைச் சந்தித்து கூறிய பொழுது இதனை மகிழ்ச்சியுடன் வரவேற்ற அவர் பௌத்த தேரர்களைச் சந்திப்பதற்கு தமது தரப்பினர் ஆவலுடன் இருப்பதாகவும் கூறினார்.

நாம் வன்னிக்குச் செல்வதற்கு முன்னர் அமரபுர நிக்காய மகாநாயக்க தேரர் உட்பட மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து உரையாடினோம்.

இச்சந்திப்பின் போது அமரபுர நிக்காய மகாநாயக்க தேரர் மடிகே பஞ்ஞாசீக தேரருடனும் ஏனைய தேரர்களுடனும் கலந்துரையாடிய போது அவர்கள் தாமும் விடுதலைப் புலிகளைச் சந்திப்பதற்கு விருப்பமாக இருப்பதாகத் தெரிவித்தனர்.

அரசியல் வாதிகள் நாட்டின் முக்கிய பிரச்சினையான இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாதவர்களாக உள்ளதுடன் விருப்பமுள்ளவர்களாகவும் காண முடியவில்லை.

இந்தக் கட்டத்தில் ஆன்மீகத் தலைவர்கள் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

அரசியல் தலைவர்கள் உட்பட தேசிய நலனைக் கருத்தில் கொள்ளாத சிலர் நடைபெற்று வரும் போரினால் இலாபம் தேடுகிறார்கள்.

தங்களுடையசுயநலன்களையும் தங்கள் கட்சிகளின் நலன்களையும் முன்னிறுத்துவதிலேயே அவர்களுடைய காலம் கழிகின்றது.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எல்லோரும் பொது அடிப்படையில் ஒத்துழைத்து இருந்தால் இந்தப் போர் தொடங்கியிருக்காது.

கடந்த காலத்தில் அரசியல் தலைவர்கள் விட்டதவறுகளினாலேயே நாடு இன்றைய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

ஆகவே இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆன்மீகத் தலைவர்கள் ஈடுபட வேண்டிய காலம் வந்து விட்டது. என்பதனையும் மகா நாயக்க தேரர்கள் உணர்ந்துள்ளனர்.

அடுத்த தடவை நாம் வன்னிக்குச் செல்லும் போதுமகா நாயக்க தேரர்களும் எம்முடன் வந்து புலிகளைச் சந்திப்பார்கள் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

(க-5)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தம்பிஜயா சிவமணி

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி தம்பிஜயா சிவமணி அவர்கள் (8-5-2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(11-5-2001) வெள்ளிக்கிழமை 7.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
த. செஜூரவல்லி (மகள்)
பு. தனபாலசிங்கம் (மருமகன்)

76/6 ஒட்டுமடம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(87656)

### கந்தையா இராசையா
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

புன்னாலைக்கட்டுவன் வடக்கை பிறப்பிடமாகவும் ஈவினையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராசையா நேற்று (10- 05- 2001) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் மகனும் செல்லம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - தங்கப்பிள்ளை ஆகியோரின் மருமகனும்இந்திராணி, இந்திரராசா (கைத்தொழில் திணைக்களம், திருகோணமலை), இந்துமதி ஆகியோரின் தந்தையும் மாணிக்கத்தியாகநாதன் (கோப்பாய் பிரதேச சபை), சாமுண்டீஸ்வரி, ஜெயக்குமார் (பாடசாலை அதிபர், புத்தளம்) ஆகியோரின் மாமனாரும் நாகரத்தினம், சங்கரப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும் அருளம்மா சுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனரும் சுஜந்தா, சசிகரன், சஞ்ஜீவன், ரஜீவன், கலியாணி, சுஜலினி, நிராகுலன், கோகுலன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (10- 05- 2001) வியாழக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
இ. இந்திரராசா (மகன்)
இ. மாணிக்கத்தியாகநாதன் (மருமகன்)

ஈவினை,
புன்னாலைக்கட்டுவன்.

(87658)

### திருமதி இரத்தினம் செல்வநாயகி
(செல்லக்கா)

தெல்லிப்பழை மேற்கு, பன்னாலையைப் பிறப்பிடமாகவும் இங்கிலாந்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் செல்வநாயகி 09 - 05 - 2001 புதன்கிழமை இங்கிலாந்தில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற வைரமுத்து இரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை, சின்னத்தம்பி, காலஞ்சென்ற சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், இங்கிலாந்தை வதிவிடமாகக் கொண்டவர்களான பத்மநாதன், இராமநாதன்,லோகநாதன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் வாசுகி, விஜயலட்சுமி, தனலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13-05-2001 ஞாயிற்றுக்கிழமை இங்கிலாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சி. சுப்பிரமணியம் (சகோதரன்)

''ஆனந்தா இல்லம்''
பன்னாலை,
தெல்லிப்பழை.

R. RAMANATHAN
3, THE ORCHARD WICKFORD,
ESSEXSS 12 OHB,
ENGLAND.

(87652)

## நிதி ஒதுக்கீடு

யாழ். மாநகரசபைப் பகுதியில் இந்த ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான நன்கொடை வேலைத் திட்டங்களுக்கென வடக்கு — கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தினால் 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுக்கென 20 லட்சம் ரூபாவுக்கான வேலைத்திட்டங்கள் தொடர்பான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டதாகவும் ஆனால் 10 லட்சம் ரூபாவுக்கான திட்டங்களுக்கே அனுமதி கிடைத்துள்ளதாகவும் மாநகரசபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நிதி ஒதுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்களின் விவரம் வருமாறு:—

★ மாநகரசபை அலுவலகத்துக்கான மரவேலை இயந்திரங்கள் கொள்வனவு — ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா.

★ அரியாலைச் சந்தைக்கான புதிய கட்டட நிர்மாணம் — 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா.

★ கல்வியங்காடு சந்தையில் மலசல கூடம் அமைப்பதற்கு — ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா.

★ யாழ். முனீஸ்வரன் வீதிக்கான அணைக்கட்டுச் சுவர் அமைப்பது — 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா

★ வீதிகள் திருத்த வேலை (மீள் தார் இடல்) — 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா.

(ம-10)

## காணாமற்போனோர் விசாரணை மேலும் சில உறவினர்களுக்கு சீ. ஐ.டி. பொலீஸ் அழைப்பு

யாழ்ப்பாணம், மே 12

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மேலும் சிலரின் விசாரணைகளை மேற்கொள்வதற்காக அவர்களின் உறவினர்களை யாழ். பொலீஸ் நிலையத்துக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.

காணாமற் போனவரின் விவரமும் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர், விவரமும் வருமாறு:-

★ குணபாலசிங்கம் பாலேந்திரன்—இல. 37, புங்கன் குளம் வீதி, அரியாலை. அழைக்கப்பட்டவர்— நவரட்ணம் புண்ணியமூர்த்தி, அரியாலை.

★ கந்தையா அருள்தரன்— இல. 21/15, வைரவர் கோவில் வீதி, அரியாலை மேற்கு. அழைக்கப்பட்டவர் — ஏ. சத்தியகுமார்-இல 21, கலைமகள் வீதி, அரியாலை மேற்கு.

★ நவரத்தினம் கதிர்காமவேல்—இல. 456, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். அழைக்கப்பட்டவர்கள்—சுப்பிரமணியம் இராசமணி — மாகியம்பிட்டி சண்டிலிப்பாய், கந்தசாமி—திருநெல்வேலி, காளி கோவிலடி.

★ பரராசசிங்கம் கஜேந்திரன்—இல. 21/5, வைமன் வீதி, முதலாம் லேன். யாழ் அழைக்கப்பட்டவர் — தேவராணி, யாழ். மாநகரசபை.

★ கிராமசேவகர் ஜே/149 பண்டத்தரிப்பு.

★ கிராமசேவகர் ஜே/78 அத்தியடி.

★ கிராமசேவகர் ஜே/102 கந்தர்மடம்.

★ கிராமசேவகர் ஜே/73 யாழ்நகர்.

★ ரட்ணம் தவராஜா — கைதடி நுணாவில், சாவகச்சேரி. அழைக்கப்பட்டவர் — கிராமசேவகர் கைதடி, நுணாவில். சாவகச்சேரி.

★ ஜக்குலின் ரொனி அர்ஜுனன்—இல. 26, சுவாட்ஸ் லேன், சுண்டிக்குளி. அழைக்கப்பட்டவர் — குணரட்ணம் மேரி ரூபி புரபதி.

★ சின்னையா இராமசாமி —மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. அழைக்கப்பட்டவர்கள் —கமலம் சின்னையா —தும்பளை, பருத்தித்துறை முருகன் கோவிலடி. ஜே/312 கிராமசேவகர் கந்தையா வாமதேவன்.

★ காசிப்பிள்ளை கேதாரநாதன்—இல. 488/1, கே. கே. எஸ். வீதி, யாழ். அழைக்கப்பட்டவர் — புண்ணியமூர்த்தி காசிப்பிள்ளை.

★ தனபாலசிங்கம் கிருஷ்ணசிங்கம் இராமகிரி, கோப்பாய் அழைக்கப்பட்டவர்— புவனேஸ்வரி கோப்பாய்.

★ வீரசிங்கம் ஜெகராஜா— அன்னாக்காய். உரும்பிராய் மேற்கு, கோப்பாய். அழைக்கப்பட்டவர்கள்— கிராமசேவகர் உரும்பராய் மேற்கு.

(ஜ 9)

## கயிற்றில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு!

### துன்னாலை குடவத்தையில் சம்பவம்

நெல்லியடி, மே 11

இரவு வேளை வீட்டில் இருந்து புறப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் மறுநாள் காலை வேறொரு இடத்தில் கயிற்றில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இச்சம்பவம் துன்னாலை கிழக்கு குடவத்தைப் பகுதியில் இடம்பெற்றது.

இதேயிடத்தைச் சேர்ந்த சின்னத்துரை துரைசிங்கம் (வயது 37) என்பவரே நேற்று பருத்தித்துறை கொடிகாமம் வீதியில், பூவரச மரம் ஒன்றிலிருந்து தூங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவரது சடலம் நேற்று நண்பகல் மந்திகை மருத்துவமனைக்குக் கொண்டுவரப்பட்டு, பிரேத பரிசோதனையைப் பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேல்பிள்ளை மேற்கொண்டார். மரணவிசாரணையைநடத்திய வடமராட்சிப் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி இ. கிருபாகரசூரியன் கயிற்றில் தொங்கிய காரணத்தினால் மூச்சுத் திணறலால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்து துன்னாலை மேற்கு வேருண்டை மயானத்தில் சடலத்தை அடக்கம் செய்யுமாறு உத்தரவிட்டுச் சடலத்தை அவரது மனைவி து. இராசராணியிடம் கையளித்தார்.

துன்னாலை கிழக்கு கிராம சேவை அலுவலர் க. பரம்சோதி, நெல்லியடி பொலீஸ் நிலைய சார்ஜன்ட் கே எம். எஸ் ஆர். ஜயசூரிய. பொலீஸ் கான்ஸ்டபிள் பி. கதிர்காமநாதன் ஆகியோர் சாட்சிகளை நெறிப்படுத்தினர்.

(ஐ-109)

## உளநலம் குன்றிய நபரைக் காணவில்லை

தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்து ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் வசித்து வந்த உளநலம் குன்றிய ஒருவர் காணாமற்போய் விட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலகத்தில் உறவினர்களினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

உசனைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவகுரு செல்வகுமார் (வயது36) என்பவரே காணாமற் போனவராவார்.

கடந்த திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு வீட்டில் இருந்து புறப்பட்ட இவர் இதுவரை வீடுதிரும்பவில்லை என்று அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது

(க-5)

## விவசாய வார விளையாட்டுப் போட்டி

யாழ் பல்கலைக்கழக விவசாய பீட மாணவர் ஒன்றியத்தினால் நடத்தப்பட்டு வரும் விவசாய வாரத்தின் இன்று வெள்ளிக்கிழமை பல்கலைக்கழக மைதானத்தில் காலை 8 30 மணி தொடக்கம் மாலை 6-00 மணி வரை தடகள விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விவசாய பீட பீடாதிபதி சு. இரா சதுரையும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக பயிரியல்துறைத் தலைவர் கலாநிதி திருமதி எஸ். சிவச்சந்திரன், விவசாய இரசாயனவியல் துறைத் தலைவர் எஸ். உதயதாஸ், விவசாயப் பொருளியல்துறைத் தலைவர் ஆர். விஜயரட்ணம், விவசாய பொறியியல் துறைத் தலைவர் பி. ஆழ்வாப்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

விவசாய வாரத்தின் இறுதி நாளான எதிர்வரும் 14ஆம் திகதி சிறு கதைப்போட்டியும் பொது அறிவுப் போட்டியும் நடைபெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

"கன்னித் தமிழ் வேர்களுக்குள் முத்தெடுப்போம்
காலந்தோறும் முத்தம் பதிப்போம்"

## யாழ்.திருமறைக் கலாமன்றம்

மகிழ்வுடன் நடத்தும்

## தமிழ் விழா - 2001

### நிகழ்ச்சிகள்

**ஏழாம் நாள் 11-05-2001 வெள்ளிக்கிழமை**

**இடம்: மன்ற கலைத்தூது மணி மண்டபம்**
**நேரம்: மாலை 5.00 மணி**

கருத்தரங்கு ~ (சைவ சித்தாந்தம்)

பொருள் : நெஞ்சுவிடு தூது
கருத்துரையாளர் : பேராசிரியர் நீ.மரியசேவியர் அடிகள்
தலைமை : திரு.இ.த.விக்னராஜா
(நீதிபதி, மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்)

**இடம்: மன்ற அரங்கு நேரம்: மாலை 6.00 மணி**

தலைமை : திரு.தீ.ச.வரதராஜன் (வரதர்)
(மூத்த எழுத்தாளர்)
சிறப்புரை : திரு.இரா.செல்வவடிவேல்
(இயக்குநர், யாழ்.கல்வி நிலையம்)
"தமிழ் வளர்த்த சான்றோர்கள்"
கலைநிகழ்ச்சி :
✲ நாட்டுக்கூத்து - முத்தா? மாணிக்கமா?
(யாழ். திருமறைக் கலாமன்றம்)

**எட்டாம் நாள் 12.05.2001 சனிக்கிழமை**

**இடம்: கைலாசபதி கலையரங்கம், யாழ்.பல்கலைக்கழகம்**
**நேரம்: மாலை 3.00 மணி**

ம.சாம் பிரதீபனின்
நீதியின் இருக்கைகள் (கவிதை நாடகங்கள்)
நூல் வெளியீடு:
இசைத் தென்றல் ம.ஜேசுதாஸனின் இசையமைப்பில்
நெஞ்சுவிடு தூது (சைவ சிந்தாந்த பாடல்கள்)
ஒலிப்பதிவு நாடா வெளியீடு

தலைமை : கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா
(தலைவர், தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
நூல் வெளியீட்டுரை: யோ.ஜோண்சன் ராஜ்குமார்
(பொதுச் செயலாளர், திருமறைக் கலாமன்றம்)
ஒலிநாடா வெளியீட்டுரை: பேராசிரியர் நீ.மரிய சேவியர் அடிகள்
(இயக்குநர், திருமறைக் கலாமன்றம்)
மதிப்பீட்டுரை (நூல்) : கவிஞர் சோ.பத்மநாதன்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
மேலதிக மாகாணத் திணைக்களம், யாழ்ப்பாணம்)
கலை நிகழ்ச்சி:
✲ நடனங்கள் - கவின் கலைகள் பயிலக மாணவிகள்
(யாழ். திருமறைக் கலாமன்றம்)
✲ நாடகம் - நீதியின் இருக்கைகள்
(யாழ். திருமறைக் கலாமன்றம்)

**இடம்: மன்ற அரங்கு நேரம்: மாலை 6.00 மணி**

✲ நாடகம் - கீறல்கள்
(கொழும்பு.திருமறைக் கலாமன்றம்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:2393

- திருமறைக் கலாமன்றம்.

(சி16659)

# திருமலையில் தேங்கிக் கிடந்த கல்வி உபகரணங்கள் யாழ்.வரும்

யாழ்ப்பாணம்,மே11

யாழ்மாவட்டப் பாடசாலைகளுக்கு வழங்கவென மத்திய, மகாண கலவி அமைச்சுக்களால் ஒதுக்கப்பட்டு, திருகோணமலையில் கடந்த ஆறு மாதங்களாகத் தேங்கிக்கிடந்த கல்விசார் உபகரணங்கள், கைந்நூல்கள் ஆகியவற்றை இங்கு எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளர் க.பரமேஸ்வரன், பிரதம கணக்காளர் எஸ்.சுகுணதீரன் ஆகியோர் மேற்கொண்ட நடவடிக்கையின் பேரில் இந்தப் பொருள்கள் இம்மாத இறுதிக்குள் இங்கு அனுப்பி வைக்கப்படவிருக்கின்றன.

திருமலையில் உள்ள இந்தப் பொருள்களை எடுத்துச்சென்று களஞ்சியப் படுத்துவதற்காகக் கொழும்பில் களஞ்சியம் ஒன்று குத்தகைக்குப் பெறப்பட்டுள்ளதாகவும் -

தற்சமயம் திருமலையில் இருந்து பொருள்கள் இந்தக் களஞ்சியத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுவருதாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

இந்தக் களஞ்சியத்தில் வைத்துப் பொருள்களைப் பொதிசெய்து கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளை செயலாளர் பரமேஸ்வரன் மேற்கொண்டுள்ளார்.

இந்தப் பொருள்களைப் பொதி செய்யும் பணிகளுக்காக யாழ்ப்பாணத்தில் உள்ள ஐந்து வலயங்களில் இருந்தும் ஊழியர்கள் செல்ல விருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3)


ராஜா
யாழ்ப்பாணம்
அஜித், லைலா
மற்றும் பலர் நடிப்பில்
தீனா
காட்சிகள்: 10.30, 2.30 (புதிய நேரம்)
(கடைசி வாரம்)

லஷ்சுமி
இணுவில்
இரண்டாவது வாரம்
விஜயகாந்த், ரம்யாகிருஷ்ணன்,
பிரகாஷ்ராஜ் நடிப்பில்
வாஞ்சிநாதன்
(மேட்னி) காட்சிகள்: 11.00, 2.30 (புதியநேரம்)

நாகம்ஸ்
சுன்னாகம்
சினிமாஸ் லிமிட்டட் வெளியீடு
அர்ஜுன், மீனா, ஜோதிகா
நடித்த
ரிதம்
(சீல்ஸ் வெளியீடு)
காட்சிகள்: 11.00, 2.30 (புதிய நேரம்)


## ஆறாத்துயரில் ஓராண்டு



அன்னை மடியில்
15.02.1982

அந்நியன் அழிப்பில்
11.05.2000

### குணரத்தினம் நிறோஜன்

(2001 உயிரியல் பிரிவு மாணவன், புனித பத்திரிசியார் கல்லூரி)

தந்தையோடு மைந்தனையும்
தாயின் முன்னே கொன்றனரே!
நொந்து விழுந்து அழுகின்றோம்
நோவறிந்து துடிக்கின்றோம்.
வந்து இவ்வுலகில் வாழ்ந்து
நீ முடிக்கவில்லை - நண்பா
முந்தி நீ போய்விட்டாய்
முறையிடும் வகையறியோம்.

11.05.2000 இல் அட்டூழியர் அழிப்பில் ஆண்டவன் அடிசேர்ந்த
**மனுவேற்பிள்ளை குணரத்தினம்,**
**குணரத்தினம் நிறோஜன்**
ஆகியோரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக பிரார்த்திக்கின்றோம்.

2001 உயர்தர மாணவர்கள்
யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி.

(87659)

## வானொலி அறிவிப்புக்கென கலைஞர்கள் தெரிவு

வானொலி அறிவிப்பு செய்வதற்கும் வானொலி நிகழ்ச்சிகளில் பங்கு பற்றுவதற்கும் பின்வரும் தராதரங்களைக் கொண்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.

01. வயதெல்லை: 18க்கும் 35 இற்கும் இடைப்பட்டவர்கள்.
02. குறைந்த பட்ச கல்வித்தரம்: க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 6 பாடங்களில் ஒரே தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அவற்றில் தமிழ்மொழி உட்பட 4பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருத்தல்வேண்டும்.

அறிவிப்புத்துறை, பத்திரிகைத்துறை, எழுத்துத்துறை, நாடகத்துறை போன்ற துறைகளில் விஷேட அனுபவம் கொண்ட விண்ணப்பதாரர்களைப் பொறுத்தவரை கல்வித்தராதரங்கள் தளர்த்தப் படுவது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 18.05.2001**

தகுதியுடையவர்கள் சுயவிவரங்களைக்கொண்ட விண்ணப்பங்களை *"பணிப்பாளர், ஊடகத்துறை, வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்குக் கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சின் யாழ்.செயலகம், 273, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்"* என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும். (87662)

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷு வருடம் சித்திரை மாதம் 29ஆம் நாள் நாளை (12.05.2001) சனிக்கிழமை பகல் 10.43 மணி முதல் 11.13 மணி வரை வரும் சுபமுகூர்த்த வேளையில்

எமது சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**ரமேஷ்**
(வீடியோ எக்கணமி மியூசிக் கோணர்)
அவர்களுக்கும்



எமது ஏக புத்திரி
திருநிறை செல்வி
**சுமதி**
அவர்களுக்கும்

ஸ்ரீ காமாக்ஷீ அம்பாளின் திருவருள் துணைகொண்டு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**தங்கள் நல்வரவை நாடும்:**

**திரு.திருமதி ஆறுமுகம்**
*இல.612/4, கே.கே.எஸ்.வீதி,*
*நாச்சிமார் கோயிலடி,*
*யாழ்ப்பாணம்.*

**திருமதி நமசிவாயம்**
*சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு,*
உரும்பிராய். (தற்காலிக முகவரி)
நிரந்தர முகவரி:
*அல்லாரை வடக்கு,மீசாலை.*

(87630) (இரு வீட்டார் அழைப்பு)

## கிறிஸ்தவ சமய சமூக ஆய்வு நிறுவனம்

சுன்னாகம்
**(C.I.S.R.S.)**

## கருத்தரங்கு

*தலைப்பு :* யாழ்ப்பாண சாதி அமைப்பு அன்றும் இன்றும்
*தலைமை :* அருட்திரு. எ.எ.போல்
(அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை)
*கருத்துரை வழங்குவோர் :* கலாநிதி. எஸ்.சிவலிங்கராஜா
(தலைவர், தமிழ்த்துறையாழ்.பல்கலைக்கழகம்)
*இடம் :* கிறிஸ்தவ குருத்துவக் கல்லூரி மண்டபம்
*மருதனார்மடம், சுன்னாகம்.*
*காலம்:* மே 12ஆம் நாள் 2001 ஆண்டு மு.ப.9.30 (பு.நே)
*ஆசியுரை:* பேராயர் அறிவர் எஸ்.ஜெபநேசன்
*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

*கிறிஸ்தவ சமய சமூக*
*ஆய்வு நிறுவனம்,*
*மருதனார்மடம்,*
*சுன்னாகம்.*
(87647)

**C.I.S.R.S.**
நிர்வாகத்தினர்.

# பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி விவரம்

கொழும்பு,மே11

கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப் படுவோரின் வெட்டுப்புள்ளி விவரங்களைப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நேற்று இணையத் தளம் மூலம் வெளியிட்டது.

கடந்த முறை பரீட்சைக்கு புதிய பாடத்திட்டம், பழைய பாடத்திட்டம் என இரு பிரிவுகளில் மாணவர்கள் தோற்றியிருந்தனர். பழைய பாடத் திட்டத்தில் நான்கு பாடங்களுக்கும் புதிய பாடத்திட்டத்தில் மூன்று பாடங் களுக்கும் பரீட்சைகள் நடைபெற் றிருந்தன.

வெவ்வேறு பாட எண்ணிக்கைகளைக் கொண்ட - இரு வெவ்வேறு பாடத்திட்டங்களின் கீழ் தோற்றிய - மாணவர்களுக்கு ஒரே சமயத்தில் பல்கலைக்கழக அனுமதி வழங்கப் படவிருப்பதால் இம்முறை வெட்டுப் புள்ளி அளவு, மொத்தப் பாடங்களின் புள்ளிப் பெறுபேறுகளின் கூட்டுத் தொகையாக இல்லாமல் சராசரிப் புள்ளி வீதத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றது.

வெட்டுப்புள்ளி விவரங்கள் மாவட்ட ரீதியாக வருமாறு:-

| மாவட்டம் | A | B | C | D | E | F | G | H | I | J | K | L | M | N | O | P | Q | R | S | T | U | V | W | X |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 72.25 | 71.66 | 70.75 | 65.66 | 65.25 | 67.00 | 64.66 | 69.66 | 67.25 | 68.00 | 68.66 | 58.33 | 59.66 | 55.33 | 74.75 | 74.00 | 71.33 | 69.00 | 67.25 | 67.00 | 70.00 | 70.66 | 70.50 | 77.50 |
| கம்பஹா | 68.50 | 67.75 | 67.25 | 62.50 | 64.00 | 63.00 | 62.33 | 64.66 | 63.66 | 63.50 | 64.50 | 55.00 | 58.75 | 54.00 | 73.33 | 73.00 | 71.00 | 70.25 | - | 67.00 | 70.00 | 70.66 | 70.50 | 77.00 |
| களுத்துறை | 69.00 | 68.75 | 68.25 | 61.75 | 63.50 | 62.66 | 61.50 | 66.75 | 65.50 | 66.25 | 65.75 | 55.50 | 59.00 | 54.25 | 72.75 | 73.33 | 70.50 | 70.25 | 67.25 | 67.00 | 70.00 | 70.33 | 70.00 | 77.66 |
| மாத்தறை | 67.75 | 66.75 | 66.33 | 65.00 | 64.75 | 62.33 | 62.25 | 63.00 | 59.75 | 62.75 | 60.33 | 53.66 | 54.33 | 51.66 | 68.66 | 71.75 | 66.75 | 70.25 | 67.25 | - | 70.00 | 67.00 | 69.75 | 78.33 |
| கண்டி | 70.25 | 69.66 | 69.50 | 64.50 | 63.75 | 64.00 | 63.33 | 67.50 | 66.50 | 67.00 | 67.25 | 55.50 | 60.00 | 54.75 | 73.00 | 72.50 | 70.66 | 70.25 | 67.25 | 67.00 | 70.00 | 70.25 | 70.00 | 77.66 |
| நுவரெலியா | 55.66 | 55.50 | 55.33 | 52.00 | 54.33 | 50.25 | 49.75 | 52.00 | 50.50 | 50.33 | 53.75 | 46.00 | 48.00 | - | 68.25 | 70.33 | 66.00 | 66.66 | - | - | - | 66.33 | 66.50 | 70.33 |
| காலி | 72.00 | 71.50 | 70.75 | 65.75 | 65.25 | 65.50 | 64.66 | 68.50 | 67.00 | 67.50 | 68.33 | 57.50 | 63.00 | 55.66 | 73.25 | 73.00 | 70.75 | 70.25 | 67.25 | 67.00 | 70.00 | 70.66 | 70.50 | 78.66 |
| மாத்தறை | 72.00 | 71.66 | 70.75 | 65.50 | 65.00 | 64.33 | 64.25 | 69.25 | 66.75 | 68.00 | 68.50 | 57.25 | 63.75 | 55.25 | 73.66 | 73.50 | 71.00 | 70.25 | 67.25 | 67.00 | 70.00 | 70.75 | 71.75 | 77.33 |
| அம்பாந்தோட்டை | 69.25 | 69.00 | 68.25 | 65.25 | 65.00 | 62.25 | 62.00 | 65.00 | 64.75 | 65.66 | 64.66 | 53.25 | 62.66 | 51.75 | 71.75 | 72.00 | 69.00 | 70.25 | 67.25 | 67.00 | 70.00 | 69.25 | 71.00 | 76.25 |
| யாழ்ப்பாணம் | 69.00 | 68.75 | 68.25 | 64.66 | 64.00 | 63.00 | 62.50 | 68.33 | 67.50 | 68.00 | 67.75 | 56.66 | 64.00 | 55.33 | 73.00 | 73.33 | 71.00 | 70.25 | - | - | 70.00 | 70.75 | 70.66 | 70.00 |
| கிளிநொச்சி | 62.50 | 60.66 | 60.00 | 56.66 | 56.75 | 56.25 | 55.50 | 64.75 | 63.33 | 64.00 | 63.00 | 54.75 | 54.50 | 53.50 | 69.00 | 66.66 | 67.75 | 70.00 | - | - | - | 67.00 | 69.75 | 69.00 |
| மன்னார் | 56.75 | 54.50 | 54.00 | 52.00 | 50.33 | 48.00 | 46.25 | 53.33 | 47.00 | 47.33 | 51.33 | 45.00 | - | - | 63.25 | 58.75 | 59.66 | 64.25 | - | - | - | 58.75 | 67.00 | 63.33 |
| முல்லைத்தீவு | 64.00 | 61.33 | 60.50 | 59.00 | 58.00 | 56.00 | 55.50 | 65.25 | 63.50 | 63.00 | 64.25 | 58.25 | 61.25 | 55.66 | 73.25 | 72.33 | 71.50 | 70.25 | - | - | 70.00 | 70.66 | 70.33 | 67.75 |
| வவுனியா | 65.75 | 64.00 | 63.25 | 61.25 | 61.00 | 59.25 | 58.33 | 68.66 | 67.50 | 68.00 | 68.25 | 56.66 | 63.75 | 54.00 | 71.50 | 71.00 | 70.00 | 70.25 | - | - | - | 70.33 | 71.75 | 72.66 |
| திருகோணமலை | 63.00 | 64.66 | 62.75 | 61.00 | 60.66 | 57.50 | 57.33 | 58.00 | 56.25 | 57.25 | 56.00 | 45.25 | 53.50 | 52.75 | 66.50 | 66.33 | 63.00 | 66.00 | - | - | - | 63.75 | 68.33 | 72.00 |
| மட்டக்களப்பு | 66.50 | 66.25 | 65.50 | 61.75 | 61.50 | 58.00 | 58.75 | 60.66 | 59.75 | 58.50 | 59.75 | 48.66 | 57.00 | 48.00 | 69.66 | 68.66 | 67.75 | 70.25 | - | - | 70.00 | 69.00 | 70.00 | 71.33 |
| அம்பாறை | 65.25 | 65.00 | 64.50 | 63.00 | 64.75 | 59.75 | 62.50 | 59.00 | 57.50 | 58.25 | 57.00 | 49.75 | 56.75 | 55.00 | 68.33 | 68.25 | 66.66 | 68.33 | - | - | 70.00 | 66.33 | 70.66 | 71.66 |
| புத்தளம் | 66.75 | 66.50 | 66.33 | 63.25 | 62.66 | 60.75 | 60.50 | 60.25 | 60.00 | 59.66 | 59.33 | 50.25 | 55.75 | 49.66 | 71.66 | 71.50 | 68.33 | 69.66 | 67.25 | - | - | 67.66 | 71.33 | 75.00 |
| குருநாகல் | 69.00 | 68.75 | 68.50 | 63.00 | 62.25 | 62.50 | 62.00 | 65.66 | 65.25 | 65.66 | 65.33 | 55.50 | 63.00 | 54.50 | 72.66 | 72.66 | 70.50 | 70.25 | 67.25 | 67.00 | 70.00 | 70.33 | 70.25 | 77.00 |
| அநுராதபுரம் | 65.00 | 64.66 | 64.50 | 62.00 | 61.75 | 60.50 | 60.25 | 59.00 | 58.66 | 58.50 | 59.33 | 48.66 | 57.66 | 47.00 | 70.33 | 73.00 | 68.00 | 69.50 | 67.25 | - | 70.00 | 67.66 | 68.75 | 74.00 |
| பொலநறுவை | 62.75 | 62.50 | 62.00 | 58.00 | 57.00 | 57.25 | 56.50 | 53.75 | 50.75 | 52.33 | 51.00 | 45.00 | 50.50 | - | 68.66 | 69.75 | 67.25 | 69.33 | - | 67.00 | 70.00 | 68.25 | 65.25 | 66.00 |
| பதுளை | 66.75 | 66.00 | 65.50 | 62.66 | 61.50 | 57.25 | 56.25 | 58.50 | 57.25 | 56.66 | 58.25 | 46.50 | 55.00 | 45.75 | 72.50 | 72.33 | 69.00 | 70.25 | 67.25 | 67.00 | 70.00 | 69.33 | 69.00 | 75.75 |
| மொனறாகலை | 62.25 | 61.75 | 61.50 | 58.25 | 57.75 | 54.25 | 56.50 | 49.00 | 47.66 | 48.33 | 43.75 | 45.00 | 47.00 | - | 67.00 | 66.25 | 65.33 | 69.25 | - | - | - | 65.50 | 69.00 | 73.75 |
| கேகாலை | 69.50 | 69.25 | 68.75 | 63.25 | 63.00 | 62.75 | 62.66 | 64.66 | 63.75 | 64.50 | 65.33 | 54.00 | 58.00 | 53.00 | 73.00 | 72.75 | 70.75 | 70.25 | - | 67.00 | 70.00 | 70.66 | 71.00 | 77.33 |
| இரத்தினபுரி | 66.33 | 66.25 | 65.75 | 64.00 | 63.66 | 62.25 | 61.50 | 63.50 | 63.25 | 63.33 | 63.00 | 55.00 | 61.75 | 54.00 | 72.00 | 71.75 | 70.00 | 70.25 | 67.25 | 67.00 | 70.00 | 69.75 | 71.33 | 77.66 |

A - மருத்துவம்; B - பல் மருத்துவம்; C - மிருக வைத்தியம்; D - விவசாயம்; E - உணவும் போசாக்கும்; F - உயிரியல் விஞ்ஞானம்; G - பிரயோக விஞ்ஞானம் (உயிரி.); H - பொறியியல் - மொறட்டுவ/பேராதனை/றுகுணு; I - பூமிவளப் பொறியியல் - மொறட்டுவ; J - புடைவைக் கைத்தொழில் தொழில்நுட்பம் - மொறட்டுவ; K - கணனி விஞ்ஞானம்; L - பௌதீக விஞ்ஞானம்; M - நில அளவையியல்; N - பிரயோக விஞ்ஞானம் (பௌதீகம்); O - முகாமைத்துவக் கல்வி; P - தோட்ட முகாமைத்துவமும் மதிப்பீடும்; Q - வர்த்தகம்; R - கலை; S - கலை (ஸ்ரீபாலி வளாகம்) - ஊடகத்துறை; T - கலை (ஸ்ரீபாலி வளாகம்) - கலை; U - கலை (சப்ரகமுவ வளாகம்); V - முகாமைத்துவக் கல்வி - வர்த்தக நெறி ; W - முகாமைத்துவக் கல்வி - சகல நெறிகளும்; X - சட்டம்.

## அவசரகாலம் மேலும் நீடிப்பு

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒருமாத காலத்துக்கு நீடிப்பதுக்கான பிரேரணை, நாடாளுமன்றத்தில் 9 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேறியது.

பிரேரணைக்கு ஆதரவாக 110 வாக்குகளும், எதிராக 101 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

ஐ.தே.க., மக்கள் விடுதலை முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், சிஹல உறுமய என்பன பிரேரணைக்கு எதிராக வாக்களித்தன.

## மெய்வன்மைப் போட்டி

நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய கல்விக் கோட்டங்களுக்கான மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் மூன்று நாள்கள் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 8 மணி முதல் நடைபெறவிருக்கின்றன. (உ-3)

## நேரடிப்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸாண்டோ ஆகியோரே இலங்கைக் குழுவில் இடம்பெறவுள்ளனர்.

நேற்றுமுன்தினம் அவசரமாக நோர்வே புறப்பட்ட நோர்வேத் தூதர் வெஸ்பேர்க் அரசுப் பிரதிநிதிகள் பட்டியலை எடுத்துச் சென்றுள்ளதாகவும் -

அந்தப் பட்டியல் விடுதலைப் புலிகளின் அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்படலாம் என்றும் -

கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

புதிய கணனிக் கற்கை நெறிகள் ஆரம்பம்

12.05.2001 பகல் 10.00 மணி

❊ 2001/2002 புலமைப் பரிசில் போட்டிப் பரீட்சையில் தோற்றி தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் உட்பட மேற்படி பிரிவில் பயிற்சி பெற விரும்பும் மாணவர்கள் அனைவரும் உடனடியாகத் தமது பதிவுகளை மேற்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

❊ வார, வார இறுதி நாள்களில் வகுப் புகள இடம்பெறும்

இயக்குநர்

IIS

(C/16632) யாழ்ப்பாணம்.

## ஊர்வலங்கள்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லிம்கள் தமது தொழுகையின் பின் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடலாம் என்பதாலும் -

பேரணிகள் நடத்துவதற்கு அரசு தடைவிதித்துள்ளது.

இருதரப்புகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலையை தணிப்பதற்காகவே இந்த நடவடிக்கையை அரசு எடுத்துள்ளது என்று அரசியல் விமர்சகர்கள் தெரிவித்தனர். (உ-ஒ-10)

## கண்ணீர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புகைக் குண்டுகளை அந்தப் பகுதியில் ஏவினர்.

இதைத் தொடர்ந்து பேரணிக்கு வந்தோர் கலைந்து ஓடினர்.

அந்தப் பகுதியில் நிலவிய பதற்றமான சூழ்நிலை காரணமாக அந்தப் பகுதியில் உள்ள கடைகள் யாவும் ஏற்கனவே மூடப்பட்டுக் கிடந்தன. பாடசாலைகளும் நேரத்துடன் மூடப்பட்டன.

பின்னர் பிற்பகல் 4 மணியளவில் மருதானையில் கூடிய 'சிஹல உறுமய' ஆதவாளர்கள் கண்டனக் கூட்டம் ஒன்றை நடத்தினர்.

அக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் திலக் கருணாரத்தின, தம்பிக்க ரணவக்க, வண.சோபித தேரர் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர். (உ-3-10)

## மேலும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னிலையில் நடைபெற்ற அடையாள அணிவகுப்பின் போதே இரண்டு சப். இன்ஸ்பெக்டர்கள், மூன்று பொலீஸ் சார்ஜன்டுகள் உட்பட ஒன்பது பொலீஸார் அடையாளம் காட்டப்பட்டனர்.

அவர்களையும் ஏற்கனவே அடையாளம் காட்டப்பட்ட ஐவரையும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி மன்னார் மாவட்ட நீதிபதி உத்தரவிட்டார்.

நேற்று அடையாளம் காட்டப்பட்ட 9 பேரும், தமக்கு எந்தெந்த வகையில் சித்திரவதைகளைச் செய்தார்கள் என்பது குறித்து பாதிக்கப்பட்ட பெண்கள் தெரிவித்த விவரங்களை அவர்களது வாக்கு மூலங்களாக நீதிமன்றம் பதிவுசெய்தது.

கடந்த மாதம் 23 ஆம் திகதி இடம்பெற்ற முதற்கட்ட அடையாள அணிவகுப்பின் போது இரு கடற்படையினரும், மூன்று பொலீஸாருமாக 5 பேர் பாதிக்கப்பட்ட பெண்களால் அடையாளம் காட்டப்பட்டிருந்தனர். (உ-ஒ)

## பேச்சுக்கான உடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவே இரண்டு தரப்பிலும் போர் நிறுத்தத்துக்கான ஆர்வம் ஏற்பட்டிருப்பது உண்மைதான். ஆனால் அது தொடர்பான உடன்பாடு ஏதும் ஏற்படவில்லை.

போர் நிறுத்தம் என்பது எல்லையில் இருக்கும் புலிப்படை அணிகளும் அரச படைகளும் துப்பாக்கிகளை கீழே வைப்பது மட்டுமல்ல; போர் நிறுத்த காலத்தில், ஏற்கனவே தான் ஆக்கிரமித்த பிரதேசத்தில் உள்ள எமது தாயக மக்களை கைது செய்தல், சித்திரவதை செய்தல், வல்லுறவுக்கு உட்படுத்துதல் போன்ற கொடுமைகளை அரச படைகள் செய்யாமலும் இருக்க வேண்டும்.

இவை பற்றி எல்லாம் விரிவாகப் பேசி, உடன்பாடு காணாமல் போர் நிறுத்த இணக்கப்பாடு வந்துவிட்டதாகக் கூறிவிட முடியாது.

### புரிந்துணர்வு உடன்பாடு

அடுத்தது - புரிந்துணர்வு பிரகடனம் பற்றியது.

இந்தப் பெயரையே 'மனிதாபிமான விவகாரங்கள் சம்பந்தமான உடன்பாடு' - என்று மாற்ற அரசு முயல்கிறது. நாம் அதை மாற்றத் தயாராகவில்லை. பெயரில் கூட இன்னும் இணக்கம் வரவில்லை.

அந்தப் பிரகடனத்தில் இன்னும் சில முக்கிய பிரச்சினைகள் பேசித் தீர்க்கப்பட வேண்டியுள்ளன. இந்த உடன்பாடு எமது மக்கள் மீதான சகல பொருளாதாரத் தடைகளையும் நீக்குவதாக அமைய வேண்டும்.

ஆனால் பெற்றோல், டீசல், சிமெந்து, உருக்குக் கம்பிகள் ஆகியவை சம்பந்தமாக கடுமையான கட்டுப்பாடுகளை அரசு போடுகின்றது.

ஒரு சிறிய வீட்டை கிணறு, மலசலகூடம் போன்றவற்றுடன் கட்டுவதானால்கூட ஆகக் குறைந்தது. ஐந்நூறு சிமெந்து பைகள் தேவை. ஆனால் ஒரு வீட்டுக்கு 25 சிமெந்து பைகள்தான் தரலாம் என்கிறது அரசு.

அத்தோடு வன்னியில் எமது மக்களின் வீடு வாசல்கள், கோயில்கள், கட்டடங்கள் எல்லாம் குண்டு வீசி அழிக்கப்பட்டுள்ளன.

இவற்றை மீள அமைப்பதற்கு அதிகளவு மூலப்பொருள்கள் தேவை. ஆனால் வன்னிக்கு மாதம் 5 ஆயிரம் சிமெந்து பைகளைத்தான் அனுமதிக்க முடியும் என்கிறது அரசு.

இந்நிலையில் புரிந்துணர்வு உடன்பாட்டு விவகாரத்திலேயே இன்னும் இணக்கம் ஏற்படாதபோது பேச்சுக்கான இணக்கம் எப்படி வரும்?

அடுத்தது - எம்மீதான தடை நீக்கப்படாமல் நாம் ஒரு போதும் பேச்சு மேசைக்குப் போகப் போவதில்லை. எம்மீது இலங்கையில் தடை விதித்து, பிறநாடுகள் சிலவற்றிலும் தடைவிதிப்பதற்கு சூத்திரதாரியாக இருந்த அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், இதனை புறந்தள்ளிவிட்டு இணக்கம் வந்துவிட்டது என்கிறார்.

தடை விவகாரத்தால் பேச்சுக்கு தடை ஏற்பட்டுவிட்டால் - அதன் சூத்திரதாரியான தன்மீதுதான் பழிவிழும் என்பதால் -

தடை விவகாரத்தை புறந்தள்ளி, ஏதோ எல்லா விவகாரங்களிலும் இணக்கம் வந்துவிட்டது போலவும், இப்போது தடை விவகாரத்தைப் புலிகள் புதிதாக முன்வைத்து ஏற்கனவே ஏற்பட்ட இணக்க நிலையை குழப்புகின்றார்கள் என்பது போலவும் காட்டித் தப்பத் திட்டமிடுகிறார் அவர்.

• புலிகளுடன் பேச்சு நடத்தித் தீர்வு காண்பதற்கு ஆக்கபூர்வமான - உருப்படியான - நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற சர்வதேச நெருக்குதல் ஸ்ரீலங்கா அரசின் மீது அதிகரித்து வருகின்றது.

அப்படிச் செய்யாவிட்டால் தாங்கள் வாக்குறுதி அளித்த கடன் உதவிகளை வழங்க முடியாது என்று ஐரோப்பிய நாடுகள் பலவும் ஸ்ரீ லங்கா அரசிடம் திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டன.

இந்த நெருக்கடிகளிலிருந்து தப்புவதற்காகவும் -

உள்நாட்டில் கிளர்ந்தெழுந்து வரும் பிரச்சினைகள், நெருக்கடிகளிலிருந்து மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்காகவும் -

புலிகளுடன் பேச்சுக்கான இணக்கம் வந்துவிட்டது என்ற புதிய கதையை அவசரப்பட்டு முன்வைக்கிறது அரசுத் தரப்பு.

அத்தகைய உடன்பாடு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுவது எமக்கு ஆச்சரியத்தை தருகின்றது. அதிகாரபூர்வமான உடன்பாடு எதுவும் எட்டப்படவேயில்லை - என்றார் அவர்.

இந்த விவகாரம் தொடர்பாக புலிகளின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் அறிக்கை இன்று வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-3)

எமது புதிய வீடியோ CD வெளியீடுகள்

✪ Night Rider 1-7 (நைட் ரைடர்)

✪ பாலமுரளிகிருஷ்ணா நேரடி மேடை சங்கீதக்கச்சேரி

✪ பல புதிய லியோனியின் பட்டிமன்றம்.

✪ வெளிவர இருக்கும் புத்தம்புதிய வீடியோ ஓடியோ போஸ்டர்களும், ஸ்ரிக்கர்களும் வந்துள்ளன.

ITN வீடியோ ஓடியோ

305, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி. (87632)

## மரண அறிவித்தல்

### நாகர் கிருஷ்ணபிள்ளை (செட்டியார்)

அல்வாய் 'தவமஹாலைச்' சேர்ந்த நாகர் கிருஷ்ணபிள்ளை (செட்டியார்) நேற்று (10-05-2001) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் தங்கப்பொன்னின் அன்புக் கணவரும் அமரர் தவமலர், விக்னேஸ்வரன்(லண்டன்), ரவி ஆகியோரின் அன்புத் தந்தையும் துரைராஜா(ஜே.பி., விவாகப் பதிவாளர் - வடமராட்சி), வெற்றிவேல் (அதிபர், கொற்றாவத்தை மெதடிஸ்தமிஷன் த.க.பாடசாலை) இந்திராணி (கொழும்பு), ஆகியோரின் அன்பு மாமனாரும் பத்மராஜன்(ஆசிரியர், ஞானசாரியார் கல்லூரி, கரவெட்டி), ரமேஸ் (பொறியியலாளர் - கனடா), மேகலா, சுரேஸ் (கனடா), சதீஸ், (பொறியியலாளர் கொழும்பு), அமரர் யமுனா, நிருத்திகா (மாணவி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்), துஷ்யந்தன்(மாணவன், ஹாட்லிக் கல்லூரி), சிந்துஜன்(மாணவன், வதிரிவடக்கு மெதடிஸ்தமிஷன் த.க.பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேரனும் நிலானி(மாணவி, வடமராட்சி மத்திய கல்லூரி, நெல்லியடி), நிஷானி (மாணவி, நெல்லியடி வடக்கு மெதடிஸ்தமிசன் த.க.பாடசாலை), நிருஷன்,கீதன்(கனடா) ஆகியோரின் அன்புப் பாட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11-05-2001) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்று பூதவுடல் பங்குவேம்படி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

'தவமஹால்',
அல்வாய்.

தகவல்:-
ந.துரைராஜா (மருமகன்)
(ஜே.பி., விவாகப் பதிவாளர், வடமராட்சி)

(C/16661)

இபபததாகை நய, உதயன பபளகேசன (பறைவேட) நறுவனததனரால யாழபபாணம கஸதூரயார வத, 361ஆம இலககததலுளள அவாகளது பணமனையல (11.05.2001) இல அசசடடு வெளியிடப்பெற்றது.